janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2023 மார்ச் 05 - மார்ச் 11 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 48




## மாமேதை காரல் மார்க்ஸ் குறித்து ஆளுநரின் விஷமத்தனமான கருத்துக்கள்:

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்

**தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, அரசியல் அமைப்புச் சட்டத்தை அலட்சியம் செய்தும், அத்துமீறியும், சிறுமைப்படுத்தியும் செயல்பட்டு வருவதை ஒட்டுமொத்த மக்களும் கண்டித்து வருகின்றனர்.**







அரசியலமைப்பு அதிகாரப் பொறுப்பில் இருந்து வரும் ஆளுநர், அரசியல் கட்சியின் சேவகராக செயல்பட்டு வருவது எதிர்மறை நடவடிக்கையாகும். அண்மைக் காலமாக கம்யூனிஸ்டுகள் மீதும், காரல் மார்க்ஸ் குறித்தும் விஷமத்தனமான கருத்துக்களை தெரிவித்து ஆத்திரமூட்டும் செயலில் ஈடுபட்டு வருகிறார். அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படைப் பண்பான மதச்சார்பின்மையை தகர்த்து, இந்தியாவும் மதம் சார்ந்த நாடு தான் என பேசி வருகிறார். ஆளுநரின் நடவடிக்கை எல்லை மீறி சென்று தமிழ்நாட்டின் அமைதி நிலையை சீர்குலைத்து வருகிறார். ஆளுநரின் அத்துமீறல்களை கண்டிக்கும் முறையில், கட்சி அமைப்புகள் மாவட்ட வட்ட, வட்டார அளவில் பிப். 28 அன்று தமிழ்நாடு முழுவதும் கண்டன முழக்க ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சென்னை மாவட்டக் குழுக்களின் சார்பில் பிப். 24 அன்று சைதாப்பேட்டை, சின்னமலை ராஜீவ் காந்தி சிலை அருகில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் அமர்ஜித் கவுர், மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர் வஹிதா நிஜாம், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், ம.ராதாகிருஷ்ணன், தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா, மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி, வடசென்னை மாவட்டச் செயலாளர் வெங்கடேஷ் வேம்புலி மற்றும் மாநில, மாவட்ட தலைவர்கள் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

**தென்காசி:** தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் டி.இசக்கித்துரை தலைமை தாங்கினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டுக்குழுத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி., ஏஐடியூசி மாநிலத் தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், மாவட்ட துணை செயலாளர் எஸ். வேலாயுதம், ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் ஜி.சுப்பையா ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**விருதுநகர்:** சேத்தூரில் ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, இளைஞர்மன்ற வழக்கறிஞர் பகத்சிங், தவிதொச வரதராஜ், தவிச அய்யணன் உள்பட பலர் கலந்து கொண்டனர். விருதுநகரில் ஒன்றிய செயலாளர் சக்கணன் தலைமையில் மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், மாநிலகுழு உறுப்பினர் பாலமுருகன், சாத்தூர் ஒன்றிய செயலாளர் சுவாமிநாதன், நகர செயலாளர் முத்துக்குமார், தஒவாஇ முருகேசன், ஏஐடியுசி பாண்டியன், அலியார் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

இராஜபாளையத்தில் நகர செயலாளர் விஜயன் தலைமையில் நிர்வாககுழு உறுப்பினர் வி.இரவி உள்பட பலர் கலந்து கொண்டனர். திருத்தங்கல்லில் நகர செயலாளர் செல்வம் தலைமையில்நடைபெற்றது.மாவட்ட துணை செயலாளர் சமுத்திரம், வட்ட செயலாளர் ஜீவா, தவிச கூடலிங்கம், சிவகாசி இக்பால், துணை செயலாளர் கலைவிசன் உள்பட பலர் கலந்து கொண்டனர். திருச்சுழி ரெட்டிய பட்டியில் நகர செயலாளர் ஜீவா தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் செல்வம், தவிச குருசாமி, துணை செயலாளர் பெரியண்ணன், ஏஐடியுசி தங்கராஜ் உள்பட ஏராளமானொர் கலந்து கொண்டனர். வத்திராயிருப்பில் வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமையில் நடைபெற்றது. துணை செயலாளர் மகாலிங்கம், தவிச சவுந்திரபாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




**கோவை:** கோவையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஜெ.ஜேம்ஸ் தலைமை தாங்கினார்.

மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் கே.எம். செல்வராஜ் கண்டன உரை நிகழ்த்தினார். இதில் மாவட்ட செயலாளர் சி. சிவசாமி, மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட

தொடர்ச்சி 6ம் பக்கம்




# கொழுப்பெடுத்து திரியும் ரவியார்!




பேரன்புமிக்க தோழர்களே!

**கொழுப்பு, சாதாரண கொழுப்பல்ல, திமிர் பிடித்த கொழுப்பு, ஆணவக் கொழுப்பு, ஆதிக்க கொழுப்பு, அதிகார கொழுப்பு, இன்னும், இன்னும் எத்தனை, எத்தனை கொழுப்புகள் உண்டோ, அனைத்தும் ஒருங்கிணைத்த மகா கொழுப்பு, வாய் கொழுப்பு பிடித்து அலையும் மனிதரை அறிவீர்களா?**

**அவர் தான் மேதகு தமிழ்நாடு ஆளுநர் ரவியார்! அவர், அந்தப் பொறுப்புக்கு வந்திட்ட நாள் முதல் ஒவ்வொரு நாளும் சர்ச்சைக்குரிய செய்திகளை தெரிவித்து வருகின்றார்.**


“ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து பின் மனிதரைக் கடிக்கும் என்று கூறுவது போல், ரவியாரின் பேச்சு அமைகிறது.

எந்த அடிப்படை அறிவும் இல்லாமல், ஏதாவது சர்ச்சைக்குரிய கருதுக்களை வெளியிட்டு பேசி வாங்கிக் கட்டிக் கொண்டது போதாமல், தடிநாக்கில் தினமும் புதுப்புது பிரச்சினைகளுக்கு காரணமாகி வருகிறார்.

விஷமத்தன சிந்தனையில் மாமேதை மார்க்ஸ் குறித்து அவதூறு பேசி வருகிறார்.

பேரறிவாளர் காரல் மார்க்ஸ் குறித்து துளியும் அருகதையற்ற, வினோதப் பிராணி ரவியார்...

இப்பூவுலகம் எந்த ஒரு தனி மனிதராலும், மனிதர்களுக்காக “படைக்கப்பட்டதல்ல” இதில் நிலமும்,



நீரும், காற்றும், நெருப்பும், வானும் என இயற்கையாக அமைந்து, முதலாளித்துவத்தின் கோரப்பிடியில் இருந்து சமூகம் விடுதலை பெற வேண்டும்.

அதன் வரலாறு காணாத நெருக்கடியின் சுமை முழுவதும் உழைக்கும் மக்கள் தலையில் ஏற்றப்பட்டு வருகிறது. இதன் காரணமாக சுமை தாங்கமல் கழுத்து முறிந்து, மனிதகுலம் ஒவ்வொரு நாளும் செத்து மடிந்து வருகிறது.

உழைக்கும் மக்களின் அன்றாட உழைப்பை இரக்கமற்ற முறையில், சுரண்டி முதலாளி வர்க்கம் கொழுப்பெடுத்து அலைகிறது.

இன்று, முதலாளித்துவம் நிதி மூலதன சக்திகள். பன்னாட்டு குழும நிறுவங்களாக வளர்ந்து, (கார்ப்ரேட் ) சமூகத்தை வஞ்சிக்கும் வஞ்சக கும்பலாக செயல்பட்டு வருகிறது.

உலகம் முழுமையும் நிறைந்துள்ள உழைப்பாளி மக்களை விரல் விட்டு என்னும் சில நபர்கள் ஆட்டிப் படைத்து வருகிறார்கள்.

உலகில் எத்தனை, எத்தனை கண்டுபிடிப்புகள் உலகில் வாழ்ந்திட்ட, வாழுகின்ற விஞ்ஞான பெருமக்களின் கண்டுபிடிப்புகள் வியப்பூட்டுகின்றன.

காட்டுப் பகுதிகளில் அலைந்து திரிந்த மனித சமுகம், சமவெளியில் அங்கும் இங்கும் நடந்தே சென்று வந்த மனித குலம், இன்று ஒரு இடத்தை விட்டு, மற்றொரு இடத்திற்கு சென்று வருவதற்கு எத்தனை வசதிகள் உருவாகியுள்ளன.

மிதிவண்டியை கண்டறிந்தான். இரு கால்களாலும் மிதித்து, மிதித்து, தான் நடந்து சென்றதைக் காட்டிலும் வேகமாக சென்றான்.

மிதிவண்டியில் கால் வலியெடுப்பதை உணர்ந்தவன் மிதிவண்டியை மாற்ற வேறு வழி தேடினான்.

மோட்டார் சைக்கிள், கார், பேருந்து, வேன், ரயில், கப்பல், விமானம், ஏன்? இன்று ராக்கெட்டிலும் மனிதன் பறந்து செல்லும் செய்தியை காண்கிறோம்.

தீபந்தம் பிடித்து, மலைப் பகுதிகளிலும், அடர் வனங்களிலும் வாழ்ந்து வந்த மனித குலம்.

காற்றின் வீச்சையும் எதிர்கொண்டு, வெளிச்சம் தரும் சிமிழி விளக்கு, அரிக்கேன் விளக்கு எனப் படிபடியாக முன்னேறி இன்று விதவிதமான, சூரிய வெளிச்சத்தையும் விஞ்சும் மின் விளக்குகள் வந்து விட்டன.

மாட்டுச் சாணத்தை தட்டி காய வைத்து அதனை விராட்டியாக்கி விறகுடன் சேர்ந்து, அடுப்பு எரித்த காலம் மறைந்து, இன்று இயற்கை எரிவாயு சிலிண்டருக்கு, மின் அடுப்புக்கு மாறி விட்டார்கள்.

தெருமுனையில் “மெக்கபோன்” வைத்து தொண்டை கிழிய பேசிய பேச்சாளர்கள், இன்று நவீன ஒலி வாங்கி, பெருக்கி வெளிபடுத்தும் நவீன சாதனங்களை பயன்படுத்தி வருகின்றனர்.

ஆள் அனுப்பிசெய்தி கூறியவன், தகவல் பரிமாற்றத்துக்கு “புறாவை” பயன்படுத்தினான். கடிதங்களை பெற்று விநியோகக்கும் முறைக்கு மாறியவன் தொலைவரிச் செய்தி, (தந்தி) க்கு தாவி முன்னேறினான்.

தொலை பேசி வந்தது. அதில் தான் எத்தனை மாற்றங்கள், அப்பப்பா? எண்ணிப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது.

ஐந்தாம் தலைமுறை தொழில் நுட்பம் (5ஜி) இன்று உலகத்தையே உள்ளங்கையில் (கைபேசி) வைத்துள்ளது.

கட்டுமரம், படகு, விசைப்படகு இன்று கப்பல் நீர் மூழ்கி கப்பல்.

ரயில் பயணம் இன்று விமானப் பயணம்.

குறுகிய சாலை மண் சாலை, கப்பி சாலை, தார் சாலை இன்று எட்டு வழி பசுமைச் சாலை என விரைவுப் பயணம் சாத்தியமாகி விட்டது.

வெள்ள பெருக்கை அணைகளை கட்டி தண்ணீர் தேக்கம் ஆக்கினான்.

மனித உழைப்பையும், கால்நடை உழைப்பையும் கொண்ட விவசாயம் இன்று முழுமையும் எந்திரமயமாகி விட்டது.

ரொக்கப் பணத்தாள்களை கட்டுக் கட்டுகளாக கட்டி சுமந்தவன் இன்று சின்னஞ்சிறு அட்டையைக் கொண்டு உலகம் சுற்றி வருகிறான்.

நாடகம், தெருக்கூத்து, திரையரங்கம், வானொலி இன்று வீட்டில் இருந்தபடி தொலைக்காட்சி. நீராவியை கொண்டு இயங்கிய ரயில் டீசலுக்கு இன்று மின்சாரத்தில் இயங்குகிறது.

விஞ்ஞான பெருமக்கள் கண்டுபிடிப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம். உலகில் உள்ள அனைத்து கண்டுபிடிப்புகளும் மனித குலத்திற்கு பயன்படுகின்றது ஆக்கம் அழிவு இரண்டுக்கும் பயன்படுகின்றது.

வில், அம்பு, கத்தி, தேர், யானை, குதிரை இவையெல்லாம் போருக்கு பயன்பட்டன.

இன்று இவைகளுக்கு வேலை இல்லை. கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், ராக்கெட்டுகள் ஏன் உலகத்தையே நொடிப் பொழுதில் அழிக்கும் அணுகுண்டுகள், நைட்ரஜன் குண்டுகள் என எத்தனை, எத்தனை கண்டுபிடிப்புகள்.

இத்தகைய கண்டுபிடிப்புகள் அனைத்தும் மனிதகுல முன்னேற்றத்திற்கும், வளமான வாழ்வுக்கு பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

ஆனால், விஞ்ஞான கண்டுபிடிப்புகள் மனிதகுலம் முழுமைக்கும் பயன்பாட்டிற்கு கிடைத்து வருகிறதா?

உழைக்கும் மக்களின் வாழ்க்கையில் மாறுதலை உருவாக்கியதா?

இல்லையே ஏன்?

உழைக்கும் மக்களின் வாழ்க்கையில் வசந்தத்தைக் காண பல விஞ்ஞானிகள் வழிதேடினர். தத்துவஞானிகள் இவ்வுலகை வியாக்யானம் செய்தனர். வழி ஏதும் அகப்படவில்லை.

உலகை மாற்றுவதற்கு வழி தேடினார் மார்க்ஸ். புதியதோர் தத்துவத்தை உலகிற்கு அளித்தார்.

வறுமை, பசி, பஞ்சம், பட்டினி, நோய் இவற்றிக்கெல்லாம் காரணம் உற்பத்தி முறையில் நிலவும் உழைப்புச் சுரண்டல், உபரி மதிப்பு, என்ற மகத்தான விஞ்ஞான உண்மையை உலகறியச் செய்தான்.

அவனது கொள்கை எட்டுத் திசையிலும்

தொடர்ச்சி 5ம் பக்கம்



சு.தமிழ்ச்செல்விராஜா

# போர்குணமிக்க மார்ச்–8 உலக மகளிர் தினம்!

**உலகம் உருவாகி மனிதகுல தொடக்கத்திலிருந்து, வரலாற்றை படைத்தவர்களாகவும் வரலாறாகவும் விளங்கியவர்கள் பெண்கள். காட்டுமிராண்டி காலத்தில் பெண்கள் அறிவாற்றலோடும், போர்களை புரியும் நிபுணத்துவத்தோடும் விளங்கியவர்கள். குழந்தைகளை காப்பது முதல் வளர்ப்பது வரை பெண்களாகத்தான் இருந்தார்கள்.**

ஆறு அறிவு இருந்தும் ஆண்களை விட பெண்கள் கீழானவர்கள், உரிமை இல்லாதவர்கள், குழந்தைகளை ஈன்றெடுக்கும் இயந்திரம் போன்றவர்கள், என்கின்ற நிலை உருவாக்கப்பட்டது.

தொடக்க காலத்தில் சமுகத்தில் பெண் அடிமைத்தனம் இருந்ததில்லை. அது பெண்களின் உரிமைகளுக்கான தாய் வழி சமூகமாகவே இருந்தது. மெல்ல மெல்ல ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் வேலைப் பிரிவினை, உடைமை மீதான ஆதிக்கம் காரணமாக, பெண்கள் உடைமை இல்லாதவர்களாகவும், குடும்பத்தில் சேவகம் செய்யும் நிலையும் உருவாக்கப்பட்டது.

இப்படியாக பெண்கள் சமூகத்தில் முடக்கப்பட்டு இருந்தார்கள். மிகச் சிறந்த வரலாற்று ஆய்வாளர் “ரோஸாலின்ட் மைல்ஸ் “என்பவர் “The women's history of the world” என்கின்ற நூலை எழுதி பெண்களின் நிலை குறித்து உலகிற்கு அறிவித்தார். ரோம் நகரத்தைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர் ஹிப்பன் என்பவர் வரலாறு என்றால் என்ன? என்பதை பற்றி ஆய்வு செய்து மனிதர்களின் குற்றங்கள் மடமைச் செயல்கள் மற்றும் இன்னல்களின் பதிவேடு ஆகும் என்று முடிவு செய்தார். தொட்டில் ஆட்டும் கை பெண்கள் என்பதால் எழுதுகோல் எழுத மறுத்து வந்ததை பதிவு செய்தார்.

“மேஃபிளவர், என்பவர் 1620 ஆம் ஆண்டுவரலாற்றை ஆய்வு செய்கிற போது வரலாற்று ஆசிரியர்கள் பெண் இனத்தைப் பற்றி சிறிதும் அக்கறை காட்டவில்லை அவர்களைப் பற்றி எந்த பதிவும் செய்யவில்லை அதனாலேயே பெண்களின் ஆளுமை அறியாமல் போனது என்று வருத்தத்துடன் பதிவு செய்துள்ளார்.

**உதாரணத்திற்கு 1238 இல் இங்கிலாந்து மன்னரின் அரண்மனையில் அந்தபுரத்தில் பாடல்கள் பாடும் வேலைக்கார பெண் கண் விழித்துக் கொண்டிருக்கிறாள். அந்த சமயத்தில் கத்தியுடன் கொலைகாரன் ஒருவன் மன்னரின் அறைக்குள் சென்று கொலை செய்ய முற்படும்பொழுது தடுத்து மன்னரை பாதுகாத்து வரலாற்றின் போக்கையே அந்த வேலைக்காரப் பெண் மாற்றினாள். அவள் பெயரைக் கூட வரலாற்று ஆசிரியர்கள் பதிவிடவில்லை என்பதே சுட்டிக்காட்டி உள்ளார்.**

பெண்களை விழிப்புணர்வு ஏற்படாமல் இருப்பதற்கு எல்லா விதமான மூடநம்பிக்கைகளை புகுத்தி சிந்திக்க விடாமல் திட்டமிட்டு மதத்தின் மூலமாக கடவுளை முன்னிறுத்தியே செய்தார்கள். சம்பிர்தாய சடங்குகள் என்று சொல்லி சமூக சடங்குகளாக மாற்றப்பட்டு பெண்களை அடிமைப்படுத்தினார்கள்.

இதையும் மீறி பெண்கள் நடந்து கொண்டால் சொர்க்கம் நகரம் என்று



சொல்லி இறந்த பின்பு நிரந்தரமான, இன்பமான புதியதோர் உலகம் இருக்கிறது. நாம் நினைத்துப் பார்க்க முடியாத அனைத்தையும் அனுபவிக்கிற உலகம் அதுதான் .அங்கு இறப்பு இல்லை நிரந்தரமான வாழ்வு உண்டு அதற்கு பெயர் தான் சொர்க்கம் என்று ஆழ பதிய வைத்து அதற்கான புதிய புதிய வழிமுறைகளை கண்டுபிடித்து செயல்படுத்தி வந்தார்கள்.

வாழும் காலத்தில் பெண்கள் ஆண்களுக்கு சேவகம் செய்யும் நிலையிலிருந்து மீறினால் நரகத்தில் தள்ளப்படுவார்கள். விஷப்பூச்சிகளோடும், கொதிக்கும் எண்ணை சட்டியில் அமுக்கி எடுக்கப்படும், தீயில் கை கால்களை தள்ளி கொளுத்தி சித்திரவதை செய்வார்கள் இது நித்தம் நித்தம் செய்யப்படும் என்று அச்சத்தை உருவாக்கி பயமுறுத்தியது ஆணாதிக்கம். அதே நேரத்தில் உலகத்தில் தோன்றிய மதங்களும் கடவுள் மூலம் இதையே வலியுறுத்தி வழிகாட்டியது.

சிறு குழந்தை திருமணம் வழக்கத்தில் இருந்த பொழுது ஆண் இறந்துவிட்டால் உயிருடன் குழந்தையாக இருக்கும் மனைவியை தீயில் தள்ளும் கொடுமை இந்தியாவில் இருந்தது. இதற்கு “உடன்கட்டை ஏறுதல்” என்று சொல்லி புனிதமாக்கப்பட்டது. குழந்தை திருமணத்தில் குழந்தையாக இருக்கும் மனைவி இறந்தால் சிறுவனாக இருக்கும் ஆண் மறுமணம் செய்து கொள்ளலாம், ஆனால் சிறுவனாக இருக்கும் கணவன் இறந்தால் குழந்தையாக இருக்கும் மனைவி சாகும் வரை திருமணம் செய்ய முடியாத கொடுமை இருந்தது.

பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் 15, யிலிந்து 19 ஆம் நூற்றாண்டுகளில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் உழைத்த போதும் அடிமைத்தனம் தொடர்ந்தது பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் ரஷ்யா, போலந்த், இத்தாலி போன்ற இடங்களில் இருந்து நியூயார்க்கில் பணிபுரிய கூடிய சூழல் உருவாகிய காலம். பெண்கள் ஆண்களை விட அதிக நேரம்வேலை செய்ய வேண்டும் ஆனால் அவர்களுக்கு குறைந்த கூலியே கொடுக்கப்பட்டது.

பெண்கள் தையல் தொழிலில் ஈடுபட்டபோது தையலுக்கு பயன்படுத்தக்கூடிய ஊசி, நூல், உட்காரும் நாற்காலியில் தொடங்கி அனைத்திற்கும் வரி கட்ட வேண்டும் என்பதுடன் கழிவறையை அதிக நேரம் பயன்படுத்துவதற்கும் அபராதம் விதித்து ஆளும் அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இதனால் துயரம் கொண்ட பெண்கள் கோபம்கொண்டு ஒன்று கூடி போராட்டத்தில் இறங்கினார்கள். பெண்களின் உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள ஆண்களை எதிர்பார்க்காமல் தாங்களே களம் காண முன்வந்தனர்.

1820 ஆம் ஆண்டு துவக்கத்தில் முதன் முதலில் இங்கிலாந்து நாட்டில் தையல் நிறுவனத்தில் வேலை செய்த பெண்கள் நியூயார்க்கில் நடந்த போராட்டத்தின் எழுச்சியால் இவர்களும் போர்களத்தில் குதித்தார்கள் அதன்பிறகு “மெஸ்வாஸ்” உள்ளிட்ட நகரங்களிலும் பெண்கள் போராட்டம் வெடித்தது.

போராட்டத்தில் பெண்கள் தொடர்ந்து கலந்து கொண்டதினால் “உழைக்கும் பெண்கள் சங்கம் உருவானது. 1908 ஆம் ஆண்டில் எட்டு மணி நேர வேலை, உழைப்புக்கேற்ற ஊதியம், (பெண்களுக்கு) வாக்குரிமை போன்ற அடிப்படையிலான கோரிக்கையை வைத்து 15 ஆயிரம் பெண்கள் நியூயார்க் நகரத்தில் குவிந்தார்கள். நகரமே ஸ்தம்பித்தது.

இந்தப் போராட்டத்தின் எழுச்சியால் அனைவரையும் கவர்ந்து வர்க்க பேதம் இன்றி அனைத்து பகுதியைச் சார்ந்த பெண்களும் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்ட முதல் போராட்டம் இதுதான் என்று பதிவு செய்திருக்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள்.

1917 யில் முதல் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டு இருந்த போது ரஷ்யாவில் போர் வேண்டாம் . “அமைதியும் ரொட்டியும்” தான் வேண்டும் என்ற முழக்கத்துடன் மார்ச் 8 தேதி பெண்கள் போராட்டம் நடத்தினார்கள் தொடர்ந்து நான்கு நாட்கள் நடத்திய இந்த போராட்டம் ஜார் மன்னரின் முடியாட்சி வீழ்வதற்கு உதவிகரமாக இருந்தது.

இந்தப் போராட்டம் தான் பெண்களுக்கு வாக்குரிமையை பெற்று தந்தது. இந்தப் போராட்டத்தின் வீரியம் சற்றும் குறையாமல் அடுத்தடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்ற பெருமை பெண் போராளி கிளாரா ஜெட்கினையேசேரும்.

**கிளாரா ஜெட்கின் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர். இவர் தான்**




**உழைக்கும் பெண்களின் சர்வதேச மாநாட்டில் உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் மகளிர் தினம் கொண்டாட வேண்டும், அதற்கு ஐ.நா. ஒப்புதல் அளித்திட வேண்டும் என்கிற தீர்மானத்தை முன்மொழிந்தார். அந்த மாநாட்டில் 17 நாடுகளிலிருந்து 100 பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். கிளாரா முன்மொழிந்த தீர்மானத்தை 100 பிரதிநிதிகளும் வழிமொழிந்தார்கள்.**

அதற்குப்பிறகு 1975 ஆம் ஆண்டு ஐ.நா. சபையில் விவாதித்து ரஷ்ய கிரிகோரியன் நாட்காட்டில் குறிப்பிட்டுள்ள மார்ச் 8 ஆம் தேதியை சர்வதேச பெண்கள் தினமாக அறிவித்தது. வாய்ப்புகள் எப்பொழுதெல்லாம் கிடைத்ததோ அப்பொழுதெல்லாம் பெண்கள் சாதனை படைத்திருக்கிறார்கள்.

மார்ச் 8 உலக மகளிர் தினம் கொண்டாடுவதில் மகிழ்ந்தாலும் பெண்கள் சிந்திக்க வேண்டும்.

**அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்ற நிலை இருந்த போதும் ஜான்சிராணி, குந்தவை நாச்சியார், குயிலி, திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் முலைக்கு வரி கேட்டு கொடுமைப்படுத்திய நிலையை எதிர்த்து தனது மார்பை அறுத்து தட்டில் வைத்து முகத்தில் வீசி எறிந்து உயிர்விட்ட வீரமங்கை நஞ்செல்லி, ஆங்கிலேய வெடி கிடங்கை அழித்த கல்பனாதத், வாழ்க்கை போராடுவதற்கே வசதிகள் தேவையில்லை என்று வாழ்ந்து காட்டிய பார்வதி கிருஷ்ணன், பெண் உரிமை போராளி கீதா முகர்ஜி போன்றவர்கள் பெண்களுக்கான அறிவுலகத்தை திறந்து வைத்தார்கள்.**

நம் நாட்டில் இன்னும் மதத்தை வைத்து பெண்களை அடிமைப்படுத்தும் மூடத்தனம் முறுக்கேறி வலம் வந்து கொண்டிருக்கிறது. அதை எதிர்த்து பெண்களை முற்போக்கு சிந்தனைக்கு அழைத்துச் செல்கிற போராளியாக இருக்கக்கூடிய நாம், முற்போக்கு சிந்தனையோடு செயல்படுகிறோமா? என்று ஆய்வு செய்தால் 98 % சதவிகிதம் கூட இல்லை என்று தான் கூற முடியும். கொள்கையை மறந்து, தத்துவத்தை மறந்து, ஊழியர் என்பதை மறந்து இல்லாத கடவுளை இருக்கிறது என்று நம்பி கோவில்களுக்கு அலைந்து கொண்டிருக்கிறோம். நம் ஊழியர் வீடுகளில் திருமணங்கள் மற்றும் விசேஷ காலங்களில் சமூகம் மாற்றத்திற்காகபோராடிய ஒருவர் இறந்தால் கூட அவர் இறப்பு நிகழ்ச்சிக்கு செல்வதில்லை. வீடு குடி போகும் நிகழ்ச்சிக்கு கூட புரோகிதரை வைப்பதற்கு வலியுறுத்துவதும் பெண்களாகிய நாமாகவே இருக்கின்றோம். அத்துடன் வரதட்சினை அதிகம் வசூலிப்பதில் (மாமியார்) பெண்களே முன்னிலையில் உள்ளனர்.

இப்படி மத சடங்குகளை, மூட பழக்க வழக்கங்களை, எதிர்த்து போராடி வருவது நாம் அங்கம் வகிக்கும் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தான்.

இந்த மகளிர் தினத்திலாவது சபதம் ஏற்க வேண்டும். தற்பொழுது நடந்த அரசு பணி தேர்வில் ஆண்களை விட பெண்கள் 86 %சதம் வெற்றி பெற்றுவேலைக்கு சென்று இருக்கிறார்கள் .

ஆனால் சமூக மாற்றத்திற்கு ஆணை பிறப்பிக்கும் இடமான நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் 33% சதவிகித இட ஒதுக்கீடு கிடைத்திட சபதம் ஏற்க வேண்டும். எல்லா நிலைகளிலிருந்தும் முதலில் பெண்கள் மாறுவதற்கான செயல்பாட்டை கடைபிடிக்க வேண்டும். பெண்களை அணி திரட்டுவோம் விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்

மதசார்பின்மையை பாதுகாப்போம் , மதவெறி செயல்களை முறியடிப்போம்.

தொடர்புக்கு: 86106 21238

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 48

## ஊர் நடுவே நச்சு மரம்!

உளறல் வாயாளரான மேன்மை தங்கிய ஆளுநர் ஆர்.என். ரவி திரும்பவும் திருவாய் மலர்ந்துள்ளார். அறிவாளர்கள் எல்லாம் ஐரோப்பாவைத் துதிக்கிறார்களாம். காரல் மார்க்ஸ், டார்வின், ரூசோ, ஆபிரகாம் லிங்கன் ஆகியோரால் இந்தியத் திருநாடு கெட்டுப் போய்விட்டதாம்!

இருப்பவன், இல்லாதவன் என மார்க்ஸ் மக்களை கூறு போடுகிறாராம். இந்த நாட்டில் இளைத்தவர்கள் எல்.ஐ.சி.யிலும், வங்கிகளிலும் போட்டு வைத்த பல்லாயிரம் கோடி ரூபாய்களை, அரசாங்கத்தின் ஆதரவோடு, வேட்டுவைத்து விட்டு வந்திருக்கிற அதானிக்கு, சாமரம் வீசுகிற கட்சிக்காரர் வேறெப்படிச் சொல்ல முடியும்?

மக்கள் தொகையில் 25% பேர் வறுமை கோட்டுக்கு கீழ் வாட, இன்னொரு 25%பேர் வாய்க்கும் கைக்குமாய் வாழ, உலகத்தில் இரண்டாவது பணக்காரனாக அதானியை உயர்த்தி வைத்து உருகுபவர்கள் அல்லவா? உழைப்பவன் கோரிக்கை வைக்கக் கூடாது, அவனுக்கு எந்த உரிமையும் இருக்கக்கூடாது என தொழிலாளர் சட்டங்களை உருட்டுகிற மேதாவிகள் அல்லவா?

கடவுள் மனிதனைப் படைத்தான், மற்றவை அவன் மகிழ்ச்சிக்காகப் படைக்கப்பட்டன என்று ஐரோப்பியத் தத்துவங்கள் கூறுகின்றனவாம். இவர்கள்தான் உயிர்களை எல்லாம் நேசிக்கிறார்களாம்!

பசியும் பட்டினியும் மிகுந்திருக்கும் போது, சிலையின் தலையில் குடம் குடமாய் பாலும், தேனும், பிசைந்த பழங்களும், சந்தனமும் இன்ன பிற பொருட்களும் தினம் தினமும் கொட்டப்படுவது வேறெந்த நாடுகளிலாவது உண்டா? பட்டாடைகளும், நெய்யும் போட்டு அக்னியில் பொசுக்கும் வேள்வியை வேறெங்கும் கண்டிருக்கிறோமா?

கல்வி கற்கக் கூடாது, வீட்டுக்குள் நுழையக்கூடாது, தொட்டால் தீட்டு, கண்டால் பாவம் என்று பல நூறு ஆண்டுகளாக சக மனிதர்களை ஒதுக்கி வைத்த இவர்களா உயிர்களை நேசிப்பவர்கள்?

கர்ப்பிணியின் வயிற்றை வாளால் அறுத்து, சிசுவை எடுத்து தீப்பிழம்பில் எறிந்த இந்தக் காடையர்களுக்கு, உயிரின் மீது நேசம் இருப்பதாகச் சொன்னால் ஓரறிவு உயிரியாவது ஒப்புக் கொள்ளுமா?

'இயற்கையை நீ அழித்தால், உன்னை அது திரும்பப் பழிவாங்கும்' என்று எச்சரித்து, எங்கெல்ஸ் எழுதியதில், ஒற்றை வரியையாவது இவர் உணர்ந்து படித்திருப்பாரா?!

குரங்கிலிருந்து பரிணாமம் அடைந்தவன் மனிதன் என சொன்ன டார்வினையும் இவர்கள் ஏற்க மாட்டார்கள் தான். இவர்கள் கூற்றுப்படி பிரம்மாவின் தலையிலிருந்தும், தோளிலிருந்தும், தொடையிலிருந்தும், பாதங்களில் இருந்தும் பிறந்தவன் தானே மனிதன்!

போதாக்குறைக்கு இந்திய நாட்டின் குடியரசு துணைத் தலைவர், அண்டவெளியில் 'ஓம்' என்ற சமஸ்கிருத சொல் தான் ஒலிக்கிறது என்று நாசாவே சொல்லிவிட்டதாக கயிறு திரிக்கிறார். பிள்ளையார் சிலை இருப்பதால், பிளாஸ்டிக் சர்ஜரி முறையை வேத காலத்திலேயே கண்டறிந்திருந்ததாகச் சொன்ன 'அந்த' விஞ்ஞானி தான் இப்படி இவர் காதில் ஓதியிருப்பாரோ?

முன்னாள் ராணுவத்தினர், கர்னல் பாண்டி, எங்களுக்கு குண்டு வைக்க தெரியும். துப்பாக்கி சுடவும் தெரியும். மிரட்டல்தான் விடுகிறோம் என்று பகிரங்கமாக பாஜக மேடையில் இருந்து தமிழ்நாடு அரசை எச்சரிக்கிறார்.

மோடி சொன்னால், சுடத் தயாராக இருக்க வேண்டும் என்று அவர்களிடம் கேட்கிறார் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை! இதை வீடியோவாக வெளியிட்டார் விசிக தலைவர் தொல் திருமாவளவன். அது எடிட் செய்யப்பட்டது என்று கொதிக்கிறார் அல்லக்கை ஒருவர்.

என்ன பேசினார் என்பதற்கு அவர்களே தான் வீடியோ காட்டட்டுமே! துபாய் ஓட்டல் அறையிலும், சென்னையில் பூஜை அறையிலும் கேமரா வைத்து தன் சொந்தக் கட்சிக்காரர்களையே வீடியோ எடுக்கும் வல்லமை பெற்ற அவர்களிடம், மேடையில் தலைவர் பகிரங்கமாகப் பேசிய வீடியோ இருக்காதா என்ன?

இந்த எச் ராஜா வேறு இடையில் குதிக்கிறார். அவரைப் போலவே ஆர்.எஸ்.எஸ்.காரன் ஒருவன் கம்யூனிசம் பற்றி எழுதிய புத்தகத்தை காட்டி, இதை முத்தரசன் படிக்கவில்லையா என்று கேட்கிறார். ஆகச் சிறந்த நடன நிகழ்ச்சிக்கு போய்விட்டு வந்தாலும், பார்வையற்றவனுக்கு மேடை இருட்டாகத்தான் தெரிந்திருக்கும். அவனிடம் கேட்டு, ஆதாரம் கிடைத்துவிட்டது எல்லாமே இருட்டு என்று கூத்தாடினால், ஆடு!

இந்த 175 ஆண்டுகளில் கம்யூனிஸம் எத்தனையோ எதிரிகளைப் பார்த்திருக்கிறது; இன்னும் உயிர் வாழ்கிறது. உயர் நீதிமன்றத்தை தலைக்கு மேலே உள்ளதுடன் ஒப்பிட்டு பேசியதற்காக, வழக்கு வந்தவுடன், தலை தரையில் பட குனிந்து மன்னிப்பு கேட்டு வந்த ஆளிடமா அஞ்சப் போகிறது!

நடுவூரில் நச்சு மரம் பழுத்து நிற்கிறது. ஊர்க்காரர்கள் செய்ய வேண்டியதைச் செய்வார்கள்.

### தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில்

# இந்தி, சமஸ்கிருத திணிப்பு எதிர்ப்புக் கருத்தரங்கம்



உலகத் தாய்மொழிகள் தினத்தை முன்னிட்டு, "இந்தி, சமஸ்கிருத திணிப்பு எதிர்ப்பு" கருத்தரங்கத்தை, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னையில் நடத்தியது.

பிப் 26 அன்று காலை 10.30 மணிக்கு தொடங்கி பிற்பகல் 1.30 வரை நடைபெற்றது. சென்னை அண்ணாசாலை, ஆயிரம் விளக்கு மெட்ரோ ஸ்டேஷன் அருகில் உள்ள எல்.எல்.ஏ. கட்டிடத்தில், தேவநேயப் பாவாணர் நூல் நிலைய அரங்கில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. முன்னதாக தோழர் தா.பாண்டியன் அவர்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இக் கருத்தரங்கிற்கு கவிஞர் சி.இராமலிங்கம் தலைமை தாங்கினார். டி.எஸ்.நடராஜன், ஜீவா மணிக்குமார், ஜி.மனோகரன், து.நாராயணசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கவிஞர் சி.கருணை மாரி வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் மருத்துவர் த. அறம் கருத்தரங்க நோக்கத்தை விளக்கி உரை நிகழ்த்தினார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் முனைவர் தொல்.திருமாவளவன் எம்.பி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திருப்பூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் கே. சுப்பராயன் எம்.பி., திராவிடர் கழகத்தின் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முனைவர் பொன்னவைக்கோ, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், சமூகநீதி மாணவர் அமைப்பின் பொதுச்செயலாளர் இர்ஷாத் ஆகியோர் கருத்துரையாற்றினர். முனைவர் கணபதி இளங்கோ நன்றியுரையாற்றினார்.

நிகழ்ச்சியை, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின், மாநில செயற்குழு உறுப்பினர் மருத்துவர் ஏ.ஆர். சாந்தி தொகுத்து வழங்கினார்.

ஒன்றிய அரசு சமஸ்கிருத, இந்தித் திணிப்பை மேற்கொள்வது கடும் கண்டனத்திற்குரியது. உடனடியாக அத்தகைய முயற்சிகளை ஒன்றிய அரசு கைவிட வேண்டும்.

எட்டாவது அட்டவணையில் இடம் பெற்றுள்ள 22 மொழிகளையும் இந்தியாவின் அலுவல் மொழியாக, நிர்வாக மொழியாக, பயிற்று மொழியாக, நீதிமன்ற மொழியாக ஆக்க வேண்டும். அனைத்து மொழிகளின் வளர்ச்சிக்கும் சமமாக நிதி ஒதுக்கிட வேண்டும். ஒரு ஜனநாயக மொழிக் கொள்கையை உருவாக்க வேண்டும்.

மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவத் துறையில் சமஸ்கிருத திணிப்பை, இந்தித் திணிப்பை மேற்கொள்வதை உடனடியாக ஒன்றிய அரசு கைவிட வேண்டும் என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### கருத்தரங்கில் தமிழறிஞர்கள் கண்டன உரை

ஒன்றிய அரசு, உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில், அலுவல் மொழி குறித்த நாடாளுமன்ற நிலைக்குழுவை அமைத்தது. அக் குழு தனது அறிக்கையில், இந்தியை முதன்மைப்படுத்தும் நோக்கத்துடனும், பிற மொழி பேசும் மக்கள் மீது திணிக்கும் நோக்கத்துடனும், பல பரிந்துரைகளை அளித்துள்ளது.

அப்பரிந்துரை, மத்திய கல்வி நிறுவனங்களின் பயிற்று மொழியாக, இந்தியை மாற்றுவதற்கு வழிவகுக்கிறது. ஒன்றிய அரசுப் பணிகளில் சேர்வதற்கு, இந்தி தெரிந்திருக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்குகிறது.

ஒன்றிய அரசின், இந்தி, சமஸ்கிருத திணிப்பை எதிர்த்து, பிப். 25 அன்று சென்னை இக்ஸா மையத்தின் ஜெ.ஜெ. அரங்கில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலத் துணைத் தலைவர் எஸ்.கே. கங்கா தலைமை தாங்கினார்.

மாநிலப் பொருளாளர் ப.பா.ரமணி வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம் கருத்தரங்க நோக்கத்தை விளக்கி உரையாற்றினார்.

"சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகம்" என்ற தலைப்பில், தொல்லியல் அறிஞர், முனைவர் ர. பூங்குன்றன், "1965 இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்" என்ற தலைப்பில், சமூக விஞ்ஞானம் ஆசிரியர் குழு உறுப்பினர் முனைவர் உலோ. செந்தமிழ்க் கோதை ஆகியோர் உரையாற்றினர்.

"உலக மொழிகளும் தாய்மொழி தமிழும்" என்ற தலைப்பில் எழுத்தாளர் தமிழ்மகன், "சமஸ்கிருதத் திணிப்பும் பிற மொழிகள் அழிப்பும்" என்ற தலைப்பில் தமிழக மக்கள் முன்னணி ஒருங்கிணைப்பாளர் பொழிலன் ஆகியோர் உரையாற்றினர்.

"இந்தி எதிர்ப்பு இலக்கிய வகைமை: தமிழிலக்கிய இயக்க வரலாற்றிலிருந்து" சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பாவேந்தர் பாரதிதாசன் ஆய்விருக்கையின் பேராசிரியர் மணி கோ. பன்னீர்செல்வம்,

"இந்தி திணிப்புக்கு எதிரான நீதிமன்ற வழக்குகள்" என்ற தலைப்பில், சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆர். நடராஜன் ஆகியோர் உரையாற்றினர்.

சென்னை மாவட்டச் செயலாளர் முனைவர் கணபதி இளங்கோ நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். திருவள்ளூர் மாவட்டப் பொருளாளர் பாலாஜி நன்றியுரையாற்றினார்.

# கச்சிராயபாளையம் மயான ஆக்கிரமிப்புகளை அகற்ற அளவீடு பணிகள் தொடக்கம்

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், வடக்கனந்தல் பேரூராட்சிக்கு உட்பட்ட கச்சிராயபாளையம் கிராம அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களின் சுடுகாடு மற்றும் சுடுகாட்டு பாதை தனி நபரால் ஆக்கிரமிக்கப்பட்டு விவசாயம் செய்து வருவதால் அப்பகுதியில் இரு பிரிவினர்களிடையே மோதல் உருவாகும் சூழ்நிலை நிலவி வந்த நிலையில் காவல்துறை, வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு கோரிக்கை மனுக்களை கொடுத்தனர்.

மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன் குமார், கோட்டாட்சியர் பவித்ரா உத்தரவின் பேரில் சின்னசேலம் தாசில்தார் இந்திரா சம்பவ இடத்திற்கு சென்று கள ஆய்வு மேற்கொண்டு நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் அளவீடு செய்து அத்துக்காட்டினர். இந்தப் பணியினை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் கவியரசு மயான பாதை, சுற்றுச்சுவர், தகனமேடை, மின்மோட்டார் உடன் கூடிய மினி டேங்க் அமைப்பது, காரிய கொட்டகை அமைப்பது, மின்விளக்கு மற்றும் கம்பம் அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை தேவைகளை செய்து தருவது குறித்து சம்பந்தப்பட்ட மக்களிடம் கேட்டறிந்தார்.

# போலி அறிவியல் சமூகத்தின் பெருங்கேடு

**இந்திய விலங்குகள் நல வாரியம் சமீபத்தில் கடந்த காதலர் தினத்தைப் 'பசு தழுவும் தினம்' என்று நகைப்புக்குரிய முறையில், பிறப்பித்த ஆணையைப் பின்னர் திரும்பப் பெற்றுக்கொண்டது. பசுவைப் புனிதமாக பூஜிப்பது அவ்வாறு நம்புபவர்களின் உரிமை. அந்தக் கருத்தை விமர்சனம் செய்வதற்கு உரிமை உள்ளது போலவே வழிபடுவதற்கும் உரிமை உண்டு. ஆயினும் இந்தியக் குடிமக்கள் பசுக்களைத் தழுவ வேண்டும் என்ற ஆணையை அரசு நிறுவனம் ஏன் வெளியிட வேண்டும்? வெளியிட்ட ஆணையை ஏன் திரும்பப் பெற வேண்டும்?**

'துளசிச் செடி ஓசோன் வாயுவை உமிழ்கிறது. எனவே, துளசிச் செடி வளர்த்து புவி வெப்பமடைதலைக் கட்டுக்குள் கொண்டு வந்துவிடலாம்' என்ற போலிச் செய்தி, சமூக வலைதளங்களின் வழியே உங்களுக்கும் வந்து சேர்ந்திருக்கலாம். துளசிச் செடி உள்பட எந்தவொரு தாவரமும் கணிசமான ஓசோன் வாயுவை உற்பத்தி செய்ய முடியாது. அது மட்டுமல்ல, பூமியிலிருந்து 15 கி.மீ. உயரத்தில் இருந்தால்தான் சூரியனின் நச்சுப் புறஊதாக்கதிரிலிருந்து ஓசோன் படலம் நமக்குப் பாதுகாப்பு தரும். ஆனால், தரைப் பகுதியில் நாம் சுவாசிக்கும்படியாக ஓசோன் வாயு இருந்தால், அது நமக்கும் விலங்குகளுக்கும் நஞ்சு. இப்படிப்பட்ட போலிச் செய்தியைப் பகிர்வதற்கு முன்னால் ஏன் நாம் சரிபார்ப்பதில்லை?

### போலி அறிவியல்

இணை சேராமல், ஆண் மயிலின் கண்ணீரைக் குடித்து பெண் மயில் கர்ப்பம் தரிக்கும் என ஒரு நீதியரசர் கூறினார். பசு மட்டுமே காற்றைச் சுவாசித்து ஆக்சிஜனை வெளியிடும் ஒரே விலங்கு என ஒரு மாநிலத்தின் முதல்வர் கூறினார். குரங்கு மனிதனாக மாறுவதை நாம் எங்கே கண்டிருக்கிறோம். எனவே பரிணாமத் தத்துவம் தவறு என்கிறார் ஒரு மத்திய அமைச்சர். உலகெங்கும் நடந்துள்ள அகழ்வாராய்ச்சிகளில் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சுட்ட மண் பாத்திரங்கள் போன்ற பொருள்கள் மட்டுமே கிடைத்திருக்கின்றன. ஆனாலும் அந்தக் காலத்தில் புஷ்பக விமானம் இருந்தது. வேற்று கிரகங்களுக்குச் சர்வசாதாரணமாகச் சென்றுவந்தனர் என்று சொன்னால் நம்புகிறோம்.

அசட்டுக் கருத்துகளின் உறைவிடம் என நாம் ஒதுக்கித்தள்ளும் சமூக வலைதளப் பதிவுகள் முதல், உயர் பதவிகளில் செல்வாக்குக் கொண்ட பலரும் அபத்தமாகக் கருத்துரைப்பது ஏன்? ஆதிசங்கரரோ, ராமானுஜரோ, ஏன் விவேகானந்தர்கூட இயற்கை அறிவியலையும் மதத் தத்துவத்தையும் கலக்கவில்லை.

'வேதியியல் கற்க அவசியம் படிக்கவேண்டிய புத்தகம் இயற்கைதான். மதத்தைக் கற்றுக் கொள்வதற்கான புத்தகம் உங்கள் சொந்த மனம்தான்' என்கிறார் விவேகானந்தர். அதாவது, அறிவியலைக் கற்க இயற்கை எனும் புத்தகத்தில் தேடு; வேத இதிகாசங்களில் தேடாதே என்கிறார் அவர்.

எனினும் இன்று பலரும் தாம் புனிதம் என்று கருதும் கருத்துகளுக்கு, போலி



அறிவியல் முலாம் பூசித் திருப்தி அடைகிறார்கள்.

### ஏன் கவலைகொள்ள வேண்டும்?

ஒருவர் பாம்பு பால் குடிக்கும் எனத் தவறாகக் கருதி நம்பிக்கைகொள்வதால் நமக்கென்ன? நாம் ஏன் மற்றவர்களின் நம்பிக்கைகளில் தலையிட வேண்டும்? கூகுள் மேப்பை திறந்து பார்த்தால், திருநள்ளாறு கோயிலின் மேலிருந்து விண்வெளியிலிருந்து எடுக்கப்பட்ட படம் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரியும். என்றாலும் நாசாவே அதைப் படம் எடுக்க முடியவில்லை என்பது போன்ற போலிச் செய்திகள் பரவல், எது உண்மையான செய்தி, எது போலிச் செய்தி எனப் பகுத்து அறிவதைச் சிக்கலாக்கி, சமூக அரசியல் விவகாரங்களில் குழப்பத்தையும் தவறான புரிதலையும் உருவாக்கும். இது ஜனநாயகத்துக்கு ஆபத்து.

புகைபிடிப்பது உடல்நலக் கேடு என நாம் அறிவோம். ஆயினும் சிலர் புகைபிடித்தால், உடல்நலக் கேடு என அறிவுறுத்துகிறோம். அதனைக் குற்றச் செயலாக வரையறை செய்வது இல்லை. ஏனெனில், அது தனிநபர் விருப்பம். ஆயினும் மற்றவர்களின் மூச்சுடன் அவர்கள் விருப்பம் இல்லாமலே கலந்துவிடுகிறது என்பதால், பொதுவெளியில் புகைப்பதை ஒழுங்குபடுத்துகிறோம். காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் வெந்நீர் குடித்தால் வயிறு நன்றாக இருப்பதாகச் சிலர் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையை மற்றவர்கள் மேல் திணிக்காத வரை, இதனால் சமூகத்துக்கு பாதிப்பு ஏதுமில்லை. ஆனால், மற்றவர்களுக்கு நேரடியாகத் தீங்கு விளைவிக்கக்கூடிய போலிச் செய்திகளைக் கண்டும் காணாமல் இருப்பது பெரும் சமூகத் தீங்கு.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குப் பிள்ளையாரின் யானை முகம் எடுத்துக்காட்டு, அந்தக் காலத்தில் புஷ்பக விமானம் இருந்தது என்பது போன்ற கருத்துகளின் தொடர்ச்சிதான் கரோனா காலத்தில் தடுப்பூசிகளுக்கு எழுந்த எதிர்ப்பும் வீட்டிலேயே பிரசவம் பார்ப்பது போன்ற மூடநம்பிக்கைகளும். நீரிழிவு, ரத்தக் கொதிப்பு போன்ற நோய்களுக்குத் தொடர்ந்து மருந்து எடுத்துக்கொள்வது அவசியம். மருத்துவம் வணிகமயமாகிவிட்ட நிலையில் அறிவியலுக்குப் புறம்பாக, தேவையற்ற மருத்துவச் சிகிச்சை மூலம் தனியார் மருத்துவமனைகள் பணம் பிடுங்குவதாகக் கருதுகிறோம். இதில் ஓரளவு உண்மை இருந்தாலும், நவீன மருத்துவமே போலி என ஒதுக்கித்தள்ளும் போக்கையும் காண்கிறோம். இது தவறான பார்வை.

மூடநம்பிக்கை எதிர்ப்பு என்பது தனிமனிதரின் நம்பிக்கைகளைத் தடைசெய்யும் போக்கு அல்ல. அந்தத் தனிமனித நம்பிக்கைகளைப் பொதுவெளியில் பரப்பி, மற்றவர்களுக்குக் குந்தகம் ஏற்பட்டுவிடக் கூடாது எனும் பார்வையே அறிவியல் மனப்பான்மை.

வானியற்பியலின் தந்தை எனப் போற்றப்படும் மேகநாட் சாஹா தனது கண்டுபிடிப்பை ஆசையாக விளக்கிக் கூறியபோது, கூட்டத்தில் ஒருவர், 'இதுதான் வேதத்தில் இருக்கிறதே' எனக்கூறிக்கொண்டிருந்தார். எல்லா அறிவியல் முன்னேற்றங்களையும் பண்டைய ரிஷி முனிகள் கண்டுபிடித்துவிட்டனர். எந்த அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியும் புதுமை இல்லை என்பது அறிவியலுக்கு எதிரானது. புதுமை காண விழையும் இளைஞர்களின் செயலூக்கத்தைக் கெடுப்பது.

இரண்டாம் உலகப் போருக்கு முன்பு உலக அறிவியல் மொழியாக ஜெர்மன் திகழ்ந்தது. ஐன்ஸ்டைன், மாக்ஸ் ப்ளாங்க் போன்ற முக்கிய அறிவியலாளர்கள் எல்லாம் ஜெர்மன் மொழியில்தான் கட்டுரைகளை எழுதினார்கள். எனவே, ஆய்வில் ஏற்படும் வளர்ச்சியை உடனுக்குடன் அறிந்துகொள்ளும் நோக்கில் எஸ்.என்.போஸ், மேகநாட் சாஹா போன்ற முதல் தலைமுறை இந்திய விஞ்ஞானிகள் ஜெர்மன் கற்றுக்கொண்டு, உலகம் வியக்கும் அறிவியலைப் படைத்தனர். அறிவு, திறமையில் யாருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என நிரூபித்தனர். இவர்கள் அமைத்த அடித்தளத்தில் தான் இன்றைய இந்திய அறிவியல் நிலைகொண்டிருக்கிறது. மாறாக போலி அறிவியல் செய்திகளை நம்புவதும், பரப்புவதும் இந்திய அறிவியலை பின்னோக்கியே இழுக்கும்.

**த.வி.வெங்கடேஸ்வரன்**
**கட்டுரையாளர்: விஞ்ஞான் பிரச்சார் நிறுவனத்தின் முதுநிலை விஞ்ஞானி**
**நன்றி: இந்து தமிழ் திசை (பிப்.26)**

2 ம் பக்கத் தொடர்ச்சி

எதிரொலித்தது. "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள். இழக்கப் போவது கைவிலங்குகள் தான், ஆனால், பெறப் போவது பொன்னுலகை" என்று பிரகடனப்படுத்தினான்.

அவனது கண்டுபிடிப்பு உலகம் முழுவதும் உள்ள உழைப்பாளி மக்களை காந்தம் போல் ஈர்த்தது.

உலக சமுதாயத்தின் ஒட்டு மொத்த விடிவெள்ளியாய் பிரகாசித்து வருகிறான். பிரகாசித்துக் கொண்டே இருக்கின்றான். அவர் தான், மாமேதை பேரறிவாளர் காரல் மார்க்ஸ் எனும் மகத்தான மனிதர்

தடிநாக்கு ரவியின் தத்துவம் கூச்சமின்றி கூறுவது, புண்ணியம் செய். செத்த பின்னர் மோட்சம் அடைவாய் என்கிறது.

**<u>மார்க்சின் தத்துவம் உழைக்கும் மக்கள் ஒன்று சேர்ந்தால் சுரண்டல் அற்ற சமுதாயத்தை அமைத்திடும், அதில் வாழும் காலத்தில் சொர்க்கத்தை காணலாம் என்கிறது.</u>**

**<u>சுரண்டல் அற்ற, சாதி, மத வேறுபாடு இல்லாத, பொதுவுடமை சமுதாயத்தை படைப்பதே மார்க்சின் தத்துவம்.</u>**

சாதியால், மதத்தால், கடவுளால், மூடநம்பிக்கை பழக்க வழக்கத்தால் மக்களை பிளவுபடுத்தி கூறுபோட்டு அரசியல் ஆதாயம் தேடுகின்ற கூட்டம் தான் ரவியாரின் கூட்டம்.

ரவி என்கிற ஆளுநரே! நீ சுகபோகம் அனுபவிக்கும் ஆளுநர் மாளிகை என்ன உன் அப்பன் வீட்டு சொத்தா?

தமிழக மக்கள் கொடுத்து வரும் வரிப்பணத்தில் உருவானது , தமிழ்நாடு அரசால் பராமரித்து வருவது என்பதனை மறந்து விடாதே.

மரபுவழி மாண்புக்கு உரிய ஆளுநர் மாளிகையை பாஜகவின் அலுவலகமாக மாற்றிட உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது?

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நிறுவனத் தலைவர்களில் ஒருவரும், ஜனசங்கத்தின் தலைவருமான தீனதயாள் உபாத்தியாய எழுதிய பிற்போக்குத்தனமான நூல்களை தமிழாக்கம் செய்து வெளியிட ஆளுநர் மாளிகையை பயன்படுத்திட உனக்கு அனுமதி அளித்தது யார்?

இந்தியாவை கெடுத்து குட்டிச் சுவர் ஆக்கியது மார்க்சா? அல்லது நீ ஏற்றுக் கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ். அமைப்பா?

காட்டுப்பூனை (ஆர்.எஸ்.எஸ்.)க்கு பிறந்திட்ட திருட்டு பூனையே வா, வெளியே வா?

மெல்ல, மெல்ல தலைகாட்ட வேண்டாம் முழுமையாக வெளியே வா மகனே!

உன் கம்யூனிஸ்ட் எதிர்ப்பை முழுமையாக கக்கு! அப்பொழுதுதான் உன் உண்மை முகம் உலகிற்கு தெரியும்!

உன் முகத்திரை கிழியும்! கிழிந்து கொண்டே இருக்கின்றது. ஆனாலும் நீ கவலைப்பட்டவனாக இல்லை. உன் முகத்திரை டிசம்பர் 29ம் நாள் கிழிக்கப்பட்டது.

போதாது என்றுதான் பிப்ரவரி 24ம் நாள் சென்னை, செங்கல்பட்டு திருவள்ளூர் மாவட்டத் தோழர்கள் திரண்டு போர்க்களம் கண்டார்கள்.

வரும் 28ம் நாள் தமிழ்நாடு முழுவதும் காண்பார்கள்.

ஆளுநர் ரவியாரோ, நாவடக்கம், நாவடக்கம்.

இல்லையேல் நடமாட முடியாது. அதனால் ஏற்படும் எத்தகைய இடர்பாட்டையும் கம்யூனிஸ்டுகள் எதிர்கொள்வார்கள்.


அரசியல் அமைப்புச் சட்டம் மக்களுக்கு வழங்கியுள்ள ஜனநாயக நெறிமுறைகளை பின்பற்றி உன்னை சந்திப்போம். வா

தைரியமிருந்தால் களத்திற்கு வா! நீயா? நாங்களா? என்பதை பார்த்து விடுவோம்.

மீண்டும் சந்திப்போம்.

வணக்கம்.

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# சேலம் சிறை தியாகிகளின் 73ஆம் ஆண்டு நினைவு நாள்

சேலம் சிறையில் 1950ம் ஆண்டு துப்பாக்கி சூட்டில் பலியான 22 வீர தியாகிகளின் 73ஆம் ஆண்டு நினைவுநாள் கருத்தரங்கம் சேலத்தில் நடைபெற்றது.

சேலம் மத்திய சிறைச்சாலை முன்பு இருந்து செந்தொண்டர்கள் தியாகிகளின் நினைவு ஜோதி எடுத்துக் கொண்டு பேரணி புறப்பட்டு சேலம் டவுன் ரயில் நிலையம் அருகில் உள்ள பாரதியார் சிலை வரை அணிவகுத்து வந்தனர்.

ஜோதியை மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி, எக்ஸ்.எம்.எல்.ஏ. பெற்று கொண்டார். செந்தொண்டர்களின் மூலம் எடுத்து வரப்பட்ட செங்கொடியை மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம்.லகுமையா பெற்று கொண்டார். மாவட்ட துணை செயலாளர் எம்.ராமன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கில் மாநில செயலாளர் இரா. முத்தரசன் துப்பாக்கி சூட்டில் பலியான ஒ.பி.ஆனந்த நம்பியாரின் பேரன் தேசிய நிர்வாக குழு உறுப்பினர் பி.சந்தோஷ்குமார் எம்.பி., மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, பழங்குடி மக்கள் மாநில செயலாளர் பி.பரமசிவம், தருமபுரி மாவட்ட செயலாளர் எஸ்.கலைசெல்வன், நாமக்கல் முன்னாள் மாவட்ட செயலாளர் எஸ்.மணிவேல், இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி, மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் பா.தினேஷ் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் துப்பாக்கி சூட்டில் பலியான தியாகிகளின் வாரிசுகளை அழைத்து மரியாதை செய்யப்பட்டது. நிறைவாக மாவட்ட துணை செயலாளர் ஏ.கந்தன் நன்றி கூறினார். இதில் மாவட்ட நிர்வாக குழு, மாவட்ட குழு, இடைக்குழு செயலாளர்கள், இடைக்குழு உறுப்பினர்கள், கிளை செயலாளர்கள், கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் என 700க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.







## மதுரை மாவட்ட ஆட்சியரை கண்டித்து ஆர்ப்பாட்டம்

மதுரையில் அமைந்துள்ள மேலூர் பேருந்து நிலையம் முன்பு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்டம் சார்பில், மேலூர் பிரதான கால்வாய் கோட்ட நீர்வளத்துறை பி.டபுள்யு.டி, தாலுகா காவல்துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் நிர்வாகத்தை கண்டித்தும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் மேலூர் தாலுகாச் செயலாளர் சுரேஷ் குமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் காளிதாஸ், புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் மெய்யர் மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர் திலகர் ஆகியோர் கண்டன உரை ஆற்றினர். தாலுகா குழு நிர்வாகிகள் உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## ஆளுநரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

1ம் பக்கத் தொடர்ச்சி

நிர்வாக குழு உறுப்பினர்கள் வி.எஸ்.சுந்தரம், பி.மௌனசாமி, மு.வ.கல்யாணசுந்தரம், கே.ரவீந்திரன், வி.ஆர்.பாண்டியன், சாந்தி சந்திரன், மற்றும் கே.சுமதி, என்.செல்வராஜ், ஆர்.பாலகிருஷ்ணன், எல். செல்வம், எஸ்.பி.தியாகராஜன், என்.சந்திரன், ஏ.அஷ்ரப்அலி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாவட்டத்துணைச் செயலாளர் எம்.குணசேகர் நன்றி கூறினார்.

**மதுரை:** மதுரை மாநகர், புறநகர் மாவட்ட குழுக்களின் சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன் தலைமையேற்க, புறநகர் மாவட்ட செயலாளர் பி.முத்துவேல் முன்னிலை வகித்தார். ஆர்பாட்டத்தில் சிபிஐ மாநில குழு உறுப்பினர் பா.ராஜலெட்சுமி, மாதர் சங்க புறநகர் மாவட்ட செயலாளர் நாகஜோதி, ஏஐடியூசி மதுரை மாவட்ட செயலாளர் கே.சேது, கட்சி கட்டுப்பாடு உறுப்பினர் ப.காளிதாஸ், மாநகர் மாவட்ட பொருளாளர் மா.இருளாண்டி, பகுதி செயலாளர்கள் ஜனசக்தி என்.ஜீவா, ரவிச்சந்திரன், ஜெயந்திநந்தாசிங், இஸ்கப் மா.செயலாளர் இரா.ஜெயராமன், ஏஐடியூசி பஞ்சாலை சங்க மாவட்ட தலைவர் கே.எஸ். ரவி உட்பட திரளாக கலந்து கொண்டனர்.

**பாபநாசம்:** பாபநாசம் அண்ணா சிலை அருகில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பாபநாசம் ஒன்றிய செயலாளர் பொன் சேகர் மற்றும் மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் இரா.பரமசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டத் துணைச் செயலாளர் ஆர்.செந்தில்குமார், மாவட்ட பொருளாளர் ஏ.ராஜேந்திரன், ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் ஆர்.தில்லைவனம், த.வி.ச. மாவட்ட செயலாளர் சாமு. தர்மராஜன், வி.தொ.ச. மாவட்ட செயலாளர் ஆர்.ராமச்சந்திரன், மாதர் சம்மேளன மாவட்ட செயலாளர் டி.கண்ணகி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்று ஆளுநரின் நடவடிக்கைகளுக்கு எதிராக முழக்கம் எழுப்பினர்.

**திருச்சி மாநகர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிழக்கு பகுதி செயலாளர் சையது அபுதாகிர் தலைமையில் ராமகிருஷ்ணா மேம்பாலம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் எம்.ஆர். முருகன், பார்வதி, அஞ்சுகம், எம்.ஆர்.எஸ்.ராஜலிங்கம், முத்துலட்சுமி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏஐடியுசி மாவட்ட பொது செயலாளர் க.சுரேஷ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, துணைச் செயலாளர் சி.செல்வகுமார், மாணவர் பெருமன்ற மாநிலப் பொருளாளர் க.இப்ராகிம், கட்சி மாவட்ட பொருளாளர் சொக்கி சண்முகம், ஏஐடியுசி மாவட்ட தலைவர் வே.நடராஜா, தரைக்கடை சங்க மாவட்ட செயலாளர் ஏ.அன்சர் தீன், விவசாய சங்க மாவட்ட செயலாளர் சிவ.சூரியன் இளைஞர் அமைப்பின் மாவட்ட செயலாளர் எம். செல்வகுமார் ஆகியோர் கண்டன உரையாற்றினார். இரா. சுரேஷ் முத்துசாமி நன்றி கூறினார்.

**திருச்சி புறநகர்:** திருச்சி புறநகர் மாவட்டம் மண்ணச்சநல்லூர் ஒன்றியம் நம்பர் ஒன் டோல்கேட் கடைவீதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மணச்சநல்லூர் ஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணன் தலைமை வகித்தார். புறநகர் மாவட்ட துணை செயலாளர் பழனிசாமி முன்னிலை வகித்தார். முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.இந்திரஜித், புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார், விசிக தொகுதி செயலாளர் ஏகலைவன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். மணப்பாறை நகர செயலாளர் ஜனசக்தி உசேன், உப்பிலியபுரம் ஒன்றிய செயலாளர் மருதை, துறையூர் ஒன்றிய செயலாளர் சேகர், லால்குடி ஒன்றிய செயலாளர் மார்ட்டின், திருவெறும்பூர் ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி உட்பட திருச்சி புறநகர் மாவட்ட, இடை கமிட்டி நிர்வாகிகள் கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

**இராமநாதபுரம்:** இராமநாதபுரம் இரயில்வே நிலையம் முன்பு மாவட்ட செயலாளர் என்.எஸ்.பெருமாள் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிபிஐமாவட்டநிர்வாகக்குழுஉறுப்பினர்கள் என்.கே.ராஜன், எஸ்.முருகபூபதி, நகர் வட்டாரச் செயலாளர் கே.களஞ்சியம், துணைச் செயலாளர் பி.நாகராஜன், மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.தர்மராஜன் உள்ளிட்ட தோழர்கள் கண்டன முழக்கங்களை எழுப்பி உரையாற்றினர்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் ரயிலடி அருகில் மாவட்ட துணைச் செயலாளர் வி.சரவணன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் ம.ராதாகிருஷ்ணன், மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சி.மாரி, சி.குருமூர்த்தி, என்.எஸ்.பிரதாப் சந்திரன், வி.தொ.ச. மாவட்டத் தலைவர் டி.கே.ராஜா, மாவட்டக்குழு உறுப்பினர்கள் கே.மதியழகன், எஸ்.ராபின், டி.லோகநாதன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

ஆவடி திருமுல்லைவாயில் பகுதியில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு சிவபெருமாள் தலைமை தாங்கினார். வி.ராமானுஜம் முன்னிலை வகித்தார்.

எஸ்.மயில்வாகனன், எஸ்.தேவேந்திரன், வெ.ஏ. ராஜீவ் காந்தி, எஸ்.கபாலி, ஜி.ஹரி, சி.சின்னப்ப தமிழர், இம்யாத் பாஷா, பிரகாஷ், நாகராஜ், மணிவண்ணன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

**தருமபுரி:** தருமபுரி மாவட்டக்குழு சார்பில் தொலைபேசி நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செலவம் தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர், எம்.மாதேஸ்வரன், மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாநில நிர்வாககுழு உறுப்பினர் எஸ்.தேவராசன் ஆர்பாட்டத்தை நிறைவு செய்து பேசினார்.

ஆர்பாட்டத்தில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சிவன், புள்ளாறு, ஏஐடியூசி மாவட்ட செயலாளர்கள் தருமபுரி கே.மணி, ஈரோடு சிவராமன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மாவட்ட பொருளாளர் சி.மாதையன் நன்றி கூறினார்.

**நெல்லை:** நெல்லை வண்ணார்பேட்டை ரவுண்டானாவில் மாவட்ட செயலாளர் செ. லட்சுமணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏ ஐ டி யூ சி மாவட்ட பொதுச் செயலாளர் ஆர்.சடையப்பன், சிபிஐ துணைச் செயலாளர் கே. முத்துகிருஷ்ணன், போக்குவரத்து செயலாளர் என். உலகநாதன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**குடியாத்தம்:** குடியாத்தம் புதிய பஸ் நிலையம் அருகே ஆளுநரை கண்டித்து ஆர்பாட்டம் நடைபெற்றது. குடியாத்தம் ஒன்றிய, நகர துணைசெயலாளர் தங்கவேலு, பேர்ணாம்பட்டு ஒன்றிய துணை செயலாளர் ஜி.எஸ்.மூர்த்தி தலைமை தாங்கினர். மாவட்ட துணை செயலாளர் துரைசெல்வம், பேர்ணாம்பட்டு ஒன்றிய நகர செயலாளர் பன்னீர்செல்வம், குடியாத்தம் ஒன்றிய நகர செயலாளர் டி. ஆனந்தன் கண்டன உரையாற்றினார்.

**திண்டுக்கல்:** திண்டுக்கல் மாவட்ட தலைமை தபால் நிலையம் முன்பாக மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி கண்டன உரை நிகழ்த்தினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய செயலாளர், ஒன்றிய குழு உறுப்பினர்கள், கிளைச் செயலாளர் மற்றும் கிளை நிர்வாகிகள் என 200க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சத்தியமங்கலம்:** சத்தியமங்கலத்தில் பி.எல்.சுந்தரம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தா.சந்திரன், திருப்பூர்.குணா ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**நாகை:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம், திருப்பூண்டியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கீழையூர் ஒன்றிய செயலாளர் எஸ்.காந்தி தலைமை தாங்கினார். மாநில குழு உறுப்பினர் டி.செல்வம் கண்டன உரை நிகழ்த்தினார். இதில் வி.தொ.ச. ஒன்றிய செயலாளர் வீ.சுப்பிரமணியன், ஒன்றிய தலைவர் டி. பாலாஜி, வி.ச. ஒன்றிய செயலாளர் எம்.ஹாஜா அலாவுதீன் உள்ளிட்ட கட்சியினர் பங்கேற்றனர். ஒன்றிய துணைச் செயலாளர் வீ.எஸ்.மாசேத்துங் நன்றி கூறினார்.

**ஆண்டிப்பட்டி:** ஆண்டிப்பட்டி நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி, நகர செயலாளர் க.முனீஸ்வரன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டு பேசினர்.

**நாமக்கல்:** நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திருச்செங்கோடு நகர செயலாளர் எஸ்.சுகுமார் தலைமை ஏற்றார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே.அன்புமணி கண்டன உரையாற்றினார். த.ஒ.வா.இ. மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், ஏஐடியுசி மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன், ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் பி.தனசேகரன், வி.ச. மாவட்ட செயலாளர் என்.செல்வராஜ், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் டி.கே.சுப்பிரமணி, திருச்செங்கோடு நகர துணை செயலாளர் பி.கார்த்திக் உள்ளிட்டோர் ஆளுநரை கண்டித்து உரையாற்றினர்.

**க.பரமத்தி:** க.பரமத்தி வடக்கு ஒன்றிய குழுவின் சார்பில் ஒன்றிய செயலாளர் எஸ்.பாலகிருஷ்ணன் தலைமையில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன், மாவட்ட துணை செயலாளர் எஸ்.மோகன்குமார், மாவட்டபொருளாளர் ஆர்.ராஜேந்திரன், நிர்வாக குழு உறுப்பினர் எம்.ரத்தினம், இனாம் கரூர் நகர செயலாளர் எம்.லட்சுமி காந்தன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, கொள்ளிடம், மயிலாடுதுறை, செம்பனார்கோயில், குத்தாலம் ஆகிய ஒன்றியங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் ஆர்.சீனிவாசன் சீர்காழியில் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். வி.ச. மாவட்ட செயலாளர் பெ.வீரராஜ், கே.ராமன், வே.நீதி சோழன், மாவட்ட குழு உறுப்பினர் எஸ். சுந்தரய்யா, தகஇபெ மாவட்ட செயலாளர் எல்.சுரேஷ், வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சி உறுப்பினர் வித்யா தேவி மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கன்னியாகுமரி:** கன்னியாகுமரி மாவட்ட குழுவின் சார்பில் குழித்துறை தபால் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு குமரி மாவட்ட துணை செயலாளர் ஜி.சுரேஷ்மேசியதாஸ் தலைமை தாங்கினார். சிபிஐ மேல்புறம் ஒன்றிய கவுன்சிலர் ஏ.டென்னிசன் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார். மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் கட்டண ஆர்ப்பாட்டத்தை விளக்கி பேசினார்.

**நெல்லை:** நெல்லை மாவட்டம் களக்காடு ஒன்றியம் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு எஸ்.வி.கிருஷ்ணன் எக்ஸ் எம்எல்ஏ தலைமை தாங்கினார். நகர செயலாளர் வி.பாண்டி, களக்காடு நகர செயலாளர் முத்துவேல், சிதம்பரம் கிளை செயலாளர் ஜவகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாய சங்க மாநில துணை தலைவர்பெரும்படையார் கண்டன உரையாற்றினார். சிபிஐ ஒன்றிய செயலாளர் கே.முருகன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அம்பை சேரை ஒன்றியம் சார்பாக அம்பாசமுத்திரம் கல்யாணி தியேட்டர் முன்பு பி.முருகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட துணைச் செயலாளர் கே. முத்துகிருஷ்ணன், பி.கண்ணன் வி.கே.புரம் செயலாளர், ஏ.ராமகிருஷ்ணன் முன்னாள் ஒன்றிய செயலாளர், வி.வடிவேலு அம்பை நகர செயலாளர், கல்யாண சுந்தரம் மாவட்டக் குழு உறுப்பினர், என்.பி. சேக் பத்தமடை நகரச் செயலாளர், வி.நமச்சிவாயம் சிவந்திபுரம் செயலாளர், பி.சபியாள் மாதர் சங்க மாவட்ட செயலாளர் ஆகியோர் கண்டன முழக்க உரையாற்றினர்.

ராதாபுரம் தாலுகா சார்பில் வள்ளியூர் காமராமஜர் சிலை முன்பு கலைமுருகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது!

எ.சேதுராமலிங்கம் தாலுகா செயலாளர், எம். எஸ் மணியன் மாவட்ட குழு உறுப்பினர், மூத்த தோழர் முருகன், ஜீவா சுப்பிரமணியன், வேம்பு சுப்பையா, ஏஐடியூசி ஆட்டோ சங்கச் செயலாளர் கண்ணன், கூலித் தொழிலாளர் சங்க செயலாளர் சுதாகர் ஆகியோர் கண்டன உரையாற்றினர். சந்தனமுத்து ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தார்.

# சாதனைப் பெண் அன்னை சத்தியவாணி முத்து



கீ.சு.குமார்

**“இது பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது” எனும் பழமொழியை திராவிட மேடைகளில் கர்ஜித்தவர்.**

**இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவை முதல் தலித் பெண் உறுப்பினர். ஒன்றிய அரசின் முதல் தலித் பெண் அமைச்சர். தமிழ்நாட்டின் முதல் பெண் அமைச்சர்.**

**மூன்று முறை சட்டமன்ற உறுப்பினர், மாநிலங்களவை உறுப்பினர்... என நீண்ட சாதனைப் பட்டியலுக்குச் சொந்தக்காரர் அன்னை சத்தியவாணி முத்து.**

**சுயமரியாதை இயக்கத்தில் பொதுவாழ்வைத் துவங்கி இறுதி வரை திராவிட அரசியலின் தவிர்க்க முடியாத சக்தியாக விளங்கியவர்.**

### குடும்பம்

வடசென்னையின் எழும்பூரில் நரியங்காடு எனும் பகுதியில் நாகநாதன் – ஜானகியம்மாள் இணையரின் மகளாக 1923 பிப்ரவரி 15 அன்று பிறந்தார் சத்தியவாணி. அவர் கணவர் பெயர் முத்து. நான்கு பிள்ளைகள்.

### பெரியார், அம்பேத்கருடன் பொது வாழ்வு பயணம்

தந்தை நாகநாதன் தென்னிந்திய பௌத்த சங்கத்தில் உறுப்பினர். மகளின் ஆறாவது வயதில் செங்கல்பட்டில் தந்தை பெரியார் தலைமையில் நடந்த சுயமரியாதை மாநாட்டிற்கு அழைத்துச் சென்று பங்கெடுத்தார். பள்ளிப்படிப்பை முடித்து ஓமியோபதி மருத்துவராக்கினார்.

தன் 20ம் வயதில் 1943இல் ஆல் இந்தியா ஷெட்யூல்ட் கேஸ்ட் பெடரேஷனின் சென்னை மாவட்டத் தலைவராக அம்பேத்கரால் நியமிக்கப்பட்டார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்த சத்தியவாணி முத்து திராவிடர் கழகம் நடத்திய சுயமரியாதை மாநாட்டில் அம்பேத்கருக்கு ஆங்கிலத்தில் வரவேற்புரை வழங்கினார்.

அந்நிகழ்வுக்கு தலைமை தாங்கிய தந்தை பெரியார் சத்தியவாணி முத்துவின் திறமையைக் கண்டு திராவிடர் கழகத்தோடு இணைந்து பணியாற்ற அழைத்துக் கொண்டார்.

### அண்ணாவுடன் அரசியல்

அண்ணாதுரை திமுகவை தொடங்கிய போது பெரியாரை விட்டு அண்ணாவோடு தி.மு.க.வை தொடங்குவதில் பங்காற்றினார். தி.மு.க.வின் அன்றைய ஒரே பெண் ஆளுமை அன்னை சத்தியவாணி முத்து. பின்னாளில் சுமார் 10 ஆண்டுகள் (1959–68) தி.மு.க.வின் கொள்கை பரப்பு செயலாளராக தமிழ்நாட்டில் மூலை முடுக்கெல்லாம் சென்று திராவிட இயக்க கொள்கைகளைப் பரப்பினார்.

பொதுக்கூட்ட மேடைகளில் உயர்ந்த கருத்துக்களை எளிய தமிழில் கண்ணியத்துடன் பேசும் சத்தியவாணி முத்துவின் பேச்சைக் கேட்க இளைஞர்கள் அதிகம் கூடுவார்கள்.

சத்தியவாணி முத்துவின் வரவுக்கு பின்னர் தான் தி.மு.க. தலைவர்களின் மனைவிகளும், குடும்பப் பெண்களும் கட்சிக்கு வர தொடங்கினார்கள்.

### புரட்சிகரத் திருமணம்

மருத்துவர் சத்தியவாணிக்கு தனது 20வது வயதில் சென்னை மாநகராட்சியில் பணியாற்றிய முத்து என்பவரோடு பெரியார் ஏற்பாட்டில் திருமணம் நடைபெற்றது. அது ஒரு சுயமரியாதைத் திருமணம். திரு.வி.க. தலைமையில் நடைபெற்றது. அன்றைய சென்னை நகர மேயர் தானலிங்க முதலியார், மீனாம்பாள் சிவராஜ், ரா.பி.சேதுப்பிள்ளை போன்ற அன்றைய தமிழகத்தின் ஆளுமைகள் வாழ்த்திப் பேசினர்.

அன்றைய சென்னை மாகாணத்தில் தலித் திருமணங்கள் விமர்சையாக நடத்தப்படுவது தடுக்கப்பட்டிருந்தது. அத்தகைய தடைகளை உடைத்தெறிந்த திருமணம் சத்தியவாணி முத்துவின் திருமணம். இவரின் திருமணமே தலித் மக்கள் மத்தியில் எழுச்சியை உண்டாக்கியது.

### போராட்ட வரலாறு

போர்க்குணமிக்க சத்தியமாணி முத்துவின் போராட்ட வரலாறுகளும் குறிப்பிடத்தக்கவை.

ராஜாஜியின் குலக்கல்வி திட்டத்தை எதிர்த்து 1953ல் தி.மு.க.வால் மறியலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஐம்பெரும் தலைவர்களுள் ஆளுக்கொரு மையத்தில் தலைமை தாங்கினார்கள்.

ராஜாஜி வீட்டு முன்பு மறியல் செய்ய ஈ.வெ.கி.சம்பத் தலைமை தாங்குவார் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், சம்பத் காவல் துறையால் முன்கூட்டியே கைது செய்யப்பட்டு விட்டதால் சத்தியவாணி முத்து தலைமை தாங்குவார் என அறிவித்தார் அண்ணா.

### நிறைமாத கர்ப்பிணியான

**சத்தியவாணி ராஜாஜி வீட்டில் சுவர் ஏறிக் குதித்து முன் வாசலில் தரையில் படுத்து மறியல் செய்து தமிழகத்தையே அதிர வைத்தார். இந்த வழக்கில் கர்ப்பிணியாகவே சிறை சென்றார்.**

இந்தி எதிர்ப்பு மொழிப்போர் உச்சத்தில் இருந்த போது அப்போராட்டத்திற்கும் தலைமை ஏற்றார். அப்போதும் அவர் கை குழந்தையோடு சிறைக்குச் சென்றார்.

### பத்திரிகையாளர்

பெண்களின் முன்னேற்றத்திற்காக ‘அன்னை’ எனும் மாத இதழை நடத்தினார்.

### அண்ணாவை வழி மொழிந்தார்

1947 ல் வடசென்னை ராயபுரம் ராபின்சன் பூங்காவில் திமுக தொடங்கப்பட்டது. அப்போது திமுகவின் பொதுச் செயலாளராக அண்ணாதுரையை வழிமொழிந்தார் சத்தியவாணி.

1956ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் முதல் முறையாக சுயேட்சை சின்னங்களில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 112 தி.மு.க.வினரில் 15 பேர் மட்டுமே வெற்றி பெற்றனர். அதில் வெற்றி பெற்ற ஒரே பெண் சத்தியவாணி.

### பட்டியலினா மாணவர் கல்வி உதவித்தொகை திட்டம்

முதன்முறையாக அண்ணாதுரை ஆட்சியமைத்த போது அவரது அமைச்சரவையில் சத்தியவாணி அமைச்சரானார். அந்த அமைச்சரவையில் இடம்பெற்ற 8 அமைச்சர்களில் ஒரே பெண் இவர் தான்.

இவரது முயற்சியால் தான் பட்டியல் சமூக மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த உதவித் தொகை திட்டம் தான் பல தலித் மாணவர்களை கல்லூரி வரை சென்று மேற்படிப்பை தொடர காரணமாக அமைந்தது. பல்வேறு சவால்களோடு இன்றும் அத்திட்டம் தொடர்கிறது.

### அண்ணாவின் நன்மதிப்பு

அன்னை சத்யவாணி முத்து அண்ணாவின் அமைச்சரவையில் இருந்து அரசு முறைப் பயணமாக மொரிஷியஸ் நாட்டுக்குச் சென்றார். அப்போது முதல்வராக இருந்த அண்ணா சத்தியவாணி முத்துவை விமான நிலையம் சென்று வழி அனுப்பியதும், நாடு திரும்பும் போது நேரில் சென்று வரவேற்றதும் வரலாற்றில் சத்தியவாணி முத்துவைத் தவிர வேறு யாருக்கும் வாய்த்திருக்க வாய்ப்பில்லை.

சத்தியவாணியின் வாழ்வில் பதவியும், அதிகாரமும் உயர்வைத் தந்தாலும், பட்டியலின மக்களின் மீதான வன்முறைகள் தொடர்வதை தடுக்க முடியவில்லை என மனம் குமறினார்.



1957ஆம் ஆண்டு முதுகுளத்தூரில் இமானுவேல் சேகரன் உள்ளிட்ட 17 பேர் படுகொலைச் சம்பவத்தை கண்டித்து சட்டமன்றத்தில் கண்ணீர் விட்டு அழுதார்.

**1968 திமுக ஆட்சியில் சத்தியவாணி அமைச்சராக இருந்தபோது தஞ்சை கீழவெண்மணியில் விவசாயத் தொழிலாளர்கள் 44 பேர் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட சம்பவத்தால் மனமுடைந்து வெண்மணிக்கு நேரில் சென்றவர், அங்கேயே தங்கி மக்களுக்கு உதவிகள் செய்து ஆற்றுப்படுத்தினார்.**

### கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தினார்

பெரியார், அம்பேத்கர் வழியில் அரசியலுக்கு வந்த அன்னை கல்வி ஒன்றே பட்டியலின மக்களை மேம்படுத்தும் என திடமாக நம்பினார்.

1973 ஆம் ஆண்டு பட்டியல் சமூக மக்கள் அதிகம் வாழும் வியாசர்பாடியில் அரசுக் கல்லூரி தொடங்கப்பட வேண்டும், அதற்கு அம்பேத்கர் பெயரிட வேண்டுமென முதல்வர் கருணாநிதியிடம் கோரினார்.

**ரூபாய் 5 லட்சம் கட்டினால் தான் விரும்பிய பெயரை கல்லூரிகளுக்கு சூட்டலாம் என்கிற அன்றைய அரசின் அறிவிப்பின்படி அன்னை சத்தியவாணி முத்து விரும்பிய டாக்டர் அம்பேத்கர் பெயரை சூட்டுவதற்காக ரூபாய் 5 லட்சத்தை கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து பல வழிகளிலும் நிதி திரட்டுவதற்கு சாலையில் இறங்கிய அன்னை சக்திவாணி முத்து, இறுதியில் வெற்றி பெற்றார். 3000 மாணவர்கள் பயிலும் அம்பேத்கர் கலை அறிவியல் கல்லூரி கட்டப்பட்டு வடசென்னை மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்து வருகிறது.**

### மேல்நிலைப்பள்ளி

அதேபோல் வடசென்னையின் பட்டியலின மக்கள் நெருக்கமாக வாழும் கன்னிகா புரத்தில் இவரது இலாகாவான ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் ஆண்கள், பெண்களுக்கான மேல்நிலைப் பள்ளியும் இவரால் அரும்பாடு பட்டு துவங்கப்பட்டதாகும்.

### சமூகப்பணி இல்லம்

1973 ஆம் ஆண்டு ஓரகடம் பகுதியில் அண்ணாவின் பெயரில் சமூகப்பணி இல்லம் ஒன்றை தொடங்கினார். நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு அது காப்பகமாகவும், பெண்கள் மறுவாழ்வு மற்றும் காப்பகமாகவும் இயங்கியது.

### பதவி பறிப்பு

1974 ஆம் ஆண்டு அன்றைய திமுக அரசு கொண்டு வந்த குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில் கோளாறு உள்ளதாக சட்டமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.

மலிவான சலுகைகளைக் காட்டி பட்டியலின ஏழைகளை மட்டும் இத்தட்டம் குறிவைக்கிறது என சொந்தக் கட்சியையே குற்றம் சாட்டினார். இதனால் அவரது அமைச்சர் பதவி பறிக்கப்பட்டது.

### தனிக்கட்சி

அண்ணாவின் ஆட்சிக்குப் பின் திமுக பட்டியலின மக்களை முறையாக நடத்தவில்லை, அவர்கள் முடிவில்லாமல் நம்மை சுரண்டுவதையும், அவமானப்படுத்துவதையும் இனியும் அனுமதிக்க முடியாது என சூளுரைத்து வெளியேறினார்.

அவருடன் தி.மு.க.வைச் சேர்ந்த 10 தனித்தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், 2 மேலவை உறுப்பினர்கள், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரும் திமுகவை விட்டு வெளியேறினர். தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம் எனும் தனிக் கட்சியை தொடங்கினார். பின்பு இக்கட்சியை அ.தி.மு.க.வில் இணைத்தார். அதன் பின்பு எம்.பி. மற்றும் ஒன்றிய அமைச்சரானார். ஒரு தலித் பெண் தலித்துகளுக்காக தனி கட்சி தொடங்கியது சமீபத்திய வரலாற்றில் இதுவே முதன்முறை.

நூற்றாண்டு விழா (1923 – 2023)

தொடர்புக்கு: 99520 23935

# தா.பா. நினைவு நாளில் இலவச மருத்துவ முகாம்

தோழர் தா.பாண்டியன் இரண்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தா.பா. கல்வி அறக்கட்டளையும், அகில இந்திய சமாதானஒருமைப்பாட்டு கழகமும் மதுரை கெனட் மருத்துவமனையுடன் இணைந்து இலவச மருத்துவ முகாம் நடத்தியது.

கூட்டுறவு துறை துணை இயக்குர் ஆ.ராஜா தலைமையில் இந்த மருத்துவ முகாமை வெ.அழகிரிசாமி எக்ஸ்.எம்.பி., டாக்டர் அகஸ்டஸ் சாமுவேல் டாட், மேனாள் சென்னை பல்கலைக்கழக பதிவாளர் தா. பா. டேவிட் ஜவஹர் ஆகியோர் துவங்கி வைத்தனர்.

ஐப்சோ மதுரை மாவட்ட செயலாளர் ந.ஜீவானந்தம், ஐப்சோ மாவட்டத் தலைவர் வி.விருமாண்டி ஆகியோர் முகாமை ஒருங்கிணைத்தனர்.

இந்த முகாமில் சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் மற்றும் பொது மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

## தேசத்தை பாதுகாப்போம், பாசி

# ஏப்ரல் 14 - மே 15 வரை அனைத்து மாநில

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூட்டம் பிப்ரவரி 26, 27 மற்றும் 28 ஆகிய மூன்று நாட்கள் புதுச்சேரியில் நடைபெற்றது. தேசிய குழு கூட்டம் நிறைவுற்ற பிறகு பிப்ரவரி 28 அன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா வெளியிட்ட செய்தி அறிக்கை பின்வருமாறு:**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூட்டம் பிப்ரவரி 26, 27 மற்றும் 28 ஆகிய மூன்று நாட்கள் புதுச்சேரியில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் வனஜா, பஞ்சாப் மாநில குழு செயலாளர் பந்த் சிங் பிரார், புதுச்சேரி மாநில குழு செயலாளர் ஏ.எம்.சலீம் ஆகியோர் தலைமை வகித்தனர்.

கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சி போக்குகள் குறித்த வரைவு அறிக்கையையும், அமைப்பு நிலை பணிகள் மற்றும் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பரப்புரைகளுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தார். வரைவு அறிக்கையில் பா.ஜ.க அரசாங்கத்தின் மக்கள் விரோத, அரசியல் அமைப்பு விரோத நடவடிக்கைகளை கட்சியின் பொதுச் செயலாளர் அம்பலப்படுத்தினார். 9 ஆண்டுகால பா.ஜ.க தலைமையிலான மோடி ஆட்சியில் இந்தியாவின் மதச்சார்பற்ற, ஜனநாயக கட்டமைப்பு சீர்குலைக்கப்பட்டு இருக்கிறது;

சாதிய கொடுமைகள், சிறுபான்மையினர் மீதான பாகுபாடுகள் அதிகரித்துள்ளன. மோடி ஆட்சியின் கூட்டாட்சி முறைக்கு எதிரான போக்கினை அம்பலப்படுத்திய அவர், 2023–24 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசாங்கத்தின் நிதிநிலை அறிக்கையைக் கடுமையாக விமர்சித்தார். சமூக நலத்துறை திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டு இருப்பது பா.ஜ.க ஆட்சியின் அவலத்தை வெளிப்படுத்துகிறது. வேலையின்மை, விலையேற்றம் ஆகிய பிரச்சனைகள் குறித்து மோடி அரசாங்கம் அக்கறை கொள்வதில்லை.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் போன்ற முக்கியமான திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு அதிக அளவில் குறைக்கப்பட்டுள்ளதை கட்சியின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான போருக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு என்பதை அவர் தெளிவுபடுத்தினார். நேட்டோ அமைப்பின் மூலமாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இந்தப் பிரச்சனையில் தலையிடுவது, போர் மேலும் தீவிரமடைய வழிவகுத்திடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

### நடைபயணம்

ஏப்ரல் 14 (அம்பேத்கர் பிறந்தநாள்) முதல் மே 15 வரை அனைத்து மாநிலங்களிலும் நடைபயணங்கள் நடத்துவது. தேசத்தையும், அரசியல் அமைப்பின் மைய விழுமியங்களையும் பாதுகாத்திட, பா.ஜ.க ஆட்சியை முறியடித்திட ஒரு அரசியல் பரப்புரையை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

“பா.ஜ.கவை விரட்டியடிப்போம், தேசத்தைப் பாதுகாப்போம்“ என்பதே இந்த அரசியல் பரப்புரையின் பிரதான முழக்கம் ஆகும். நடைப்பயணங்கள் மட்டுமின்றி, பா.ஜ.க அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகள் குறித்தும், கல்வி, சுகாதாரம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் போன்ற முக்கியமான திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்திட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் பொதுக்கூட்டங்களும் நடத்தப்பட வேண்டும். அதானி குழும முறைகேடுகள் மற்றும் அவற்றில் அரசாங்கத்தின் பங்கு ஆகியவை குறித்து விசாரணை மேற்கொள்ள நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று கட்சி வலியுறுத்துகிறது.

2024 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் நாட்டிற்கும், நாட்டு மக்களின் வருங்காலத்திற்குமான முக்கியமான தேர்தல் ஆகும். நமது குடியரசு பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க அணி அரசியல் ரீதியாகவும், தத்துவார்த்த ரீதியாகவும் தோற்கடிக்கப்பட வேண்டும். மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகளின் ஒற்றுமையை வலியுறுத்தி, கட்சியின் 24வது அகில இந்திய மாநாடு அதற்கான தெளிவான அறைகூவலை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

**தீர்மானம் 1:** ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் நாடாளுமன்றம் நோக்கிய பேரணிக்கான அறைகூவலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூட்டம் முழு ஆதரவு தெரிவிக்கிறது. விவசாய சங்கங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தாமல், மோடி அரசாங்கம் விவசாயிகளுக்கு துரோகம் இழைத்துள்ளதற்கு கட்சி அதன் கண்டனத்தைத் தெரிவிக்கிறது.

ஐக்கிய விவசாயிகள் முன்னணி பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்துகிறது:

1. வேளாண் விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.
2. கடன் நிவாரண நடவடிக்கைகள்
3. விவசாயிகள் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும்.
4. போராட்டத்தில் உயிர் நீத்த விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.
5. விவசாய துறைக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டு இருப்பது விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பை உண்டாக்கி வருகிறது.

விவசாயிகளின் போராட்ட நடவடிக்கையை முழுமையாக ஆதரித்து, அதனை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்று கட்சியினருக்கும், வர்க்க, வெகுஜன அமைப்புகளுக்கும் கட்சி அறைகூவல் விடுக்கிறது.

**தீர்மானம் 2:** பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் உள்ளாட்சி அமைப்பான கண்டோன்மெண்ட் போர்டுக்கு பிரதிநிதிகள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் இந்தியாவில் மொத்தம் 62 கண்டோன்மெண்ட் போர்டுகள் உள்ளன. இவற்றுக்கான தேர்தல் 30.04.2023 அன்று நடைபெறவுள்ளது.

உச்சநீதிமன்ற தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, பாதுகாப்புத் துறையின் இடத்தில் வசித்து வரும் மக்கள் திரளில் ஒரு சில பகுதியினரின் வாக்களிக்கும் உரிமை இம்முறை திரும்பப் பெறப்பட்டுள்ளது. தேச விடுதலைக்கு முன்பிருந்தே பாதுகாப்புத் துறையின் இடத்தில் வசித்து வரும் ஆயிரக்கணக்கானோரின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. பல பத்தாண்டுகளாக கண்டோன்மெண்ட் போர்டு இடத்தில் வசித்து வரும் தொழிலாளர்கள் (கண்டோன்மெண்ட் போர்டு ஊழியர்கள்) பெயர்களும் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. அரசியல் அமைப்பு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி




மற்றும் ஜனநாயக விழுமியங்களுக்கு ஏற்ப கண்டோன்மெண்ட் போர்டு தேர்தல் விதிமுறைகள் திருத்தப்பட வேண்டும்.

**தீர்மானம் 3:** இந்திய அரசாங்கத்தின் எத்தனால் கலந்த பெட்ரோல் (Ethanol blended petrol) கொள்கை எரிசக்தி பாதுகாப்பிற்கான தீர்வாகாது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இந்தக் கொள்கை காற்று மாசுபாடு மற்றும் பருவகால நிலை பிரச்சனைகளுக்கு தீர்வல்ல. உண்மையில், இதன் நடைமுறை காரணமாக கரியமில வாயு வெளியேற்றம் அதிகரிக்கவே செய்கிறது என்று விஞ்ஞானிகள் எடுத்துக்காட்டியுள்ளனர். ஆட்டோமொபைல் தொழில்துறையை மேம்படுத்துவது என்ற நிலையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், எண்ணெய் இறக்குமதி செலவினங்களைத்தான் அதிகரிக்கும். கூடிய விரைவில் மின்சார வாகனங்களை நோக்கி நாம் மாறுவதும், 2030 ஆம் ஆண்டிற்கு முன் எண்ணெய் மூலம் இயங்கும் வாகனங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதும் தான் பிரச்சனைகளுக்கு உண்மையான தீர்வாக இருக்கும். உணவு உற்பத்தி என்பதில் இருந்து எரிபொருள் உற்பத்தி என்பதற்காக நிலங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்று விவசாயிகளுக்கு அழுத்தம் கொடுப்பது அவர்களுக்குப் பெரும் துன்பத்தையே ஏற்படுத்தும். இதன் மூலம் பொதுமக்களுக்கும் எவ்வித நன்மையையும் இராது. ரியோ பிரகடனத்தின்படி, வளர்ச்சிப் பணிகள் குறித்த முடிவுகளை மேற்கொள்ளும் செயல்பாடுகளில் பங்கேற்பதற்கான விவசாயிகளின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை எத்தனால் உற்பத்தியாளர்களுக்குச் சாதகமான முறையில் பறிப்பது, நிலம் மற்றும் நீர் ஆதாரங்கள் தொடர்பான மோதல்களுக்கு வழிவகுக்கும். எத்தனால் கலந்த பெட்ரோல் கொள்கையை முன்னிலைப்படுத்துவதன் மூலம் கரியமில வாயு வெளியேற்றத்தை 2070 ஆம் ஆண்டுவாக்கில் பூஜ்ய அளவிற்கு குறைக்க வேண்டும் என்ற இலக்கை அடைய முடியாமல் இந்தியா தடுமாறும். எனவே, எத்தனால் கலந்த பெட்ரோல் கொள்கையை கைவிடுமாறு தேசியக் குழு வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 4:** மார்க்சிய சித்தாந்தத்தின் மீது அவசியமற்ற, அவதூறு கருத்துகளை வெளியிட்ட தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழுக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழ்நாடு ஆளுநர் பதவியில் இருந்து ரவியைத் திரும்பப் பெற வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு இந்திய குடியரசுத் தலைவரை வற்புறுத்துகிறது.

தீன் தயாள் உபாத்யாயாவின் நூல்கள் (தமிழ் மொழிபெயர்ப்பு) வெளியீட்டு நிகழ்ச்சியொன்றில் பேசிய ரவி, இந்தியாவின் வளர்ச்சியை மார்க்சிய சித்தாந்தம் சிதைத்தது என்று கூறியுள்ளார். மேலும், டார்வினின் பரிணாமத் தத்துவத்தை அறிவியலுக்கு விரோதமானது என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

ரவியின் இத்தகைய பகுத்தறிவுக்கு ஒவ்வாத, அறிவியலுக்கு எதிரான, தேவையற்ற கருத்துகளுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கடுமையான ஆட்சேபத்தைப் பதிவு செய்கிறது. கம்யூனிஸ்டுகள் மீது தாக்குதல் நடத்திடவும், அறிவியல் மனப்பான்மையின் வளர்ச்சிப் போக்கிற்கு முட்டுக்கட்டை போடவும் இது போன்ற திட்டமிட்ட பரப்புரைகளை ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க அணி செய்து வருகிறது.

மாநில சட்டமன்றம் நிறைவேற்றிய 15 மசோதாக்களுக்கு அவர் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு வைத்துள்ளார். இந்துத்துவ சித்தாந்தத்தைப் பரப்பும் ஒரு ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரகர் போலவே அவர் செயல்பட்டு வருகிறார். ஒருபுறம், மாநிலங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களை நிலைகுலைப்பதற்காகவும், மற்றொரு புறம் இந்துத்துவ சித்தாந்தத்தைப் பரப்புவதற்காகவும், பா.ஜ.க ஆளுநர் பதவியின் அதிகாரங்களைத் தொடர்ந்து தவறாகப் பயன்படுத்தி வருகிறது. குறிப்பாக, முற்போக்கு திராவிட பண்பாடு ஆழமாக வேர்விட்டுள்ள தமிழ்நாட்டில், மூடநம்பிக்கைகளையும், பிற்போக்குத்தனத்தையும் விதைத்திட வேண்டும் என்று பா.ஜ.க மூர்க்கத்தனமாக முயன்று வருகிறது.

ஆளுநர் பதவி ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தேசியக் குழு மீண்டும் வலியுறுத்துவதுடன், மார்க்சிய சித்தாந்தத்தின் மீது அவதூறு கருத்துகளை வெளியிட்ட ஆளுநரைக் கண்டிப்பதுடன், தமிழ்நாடு ஆளுநர் பதவியில் இருந்து அவரை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று குடியரசுத் தலைவரை வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 5:** இரு நாட்களுக்கு முன், தெலங்கானாவில் உள்ள காகத்தியா மருத்துவ கல்லூரி முதுகலை மாணவர் ப்ரீத்தி ராகிங் காரணமாகத் தற்கொலை செய்து கொண்டார்.

ஜூனியர் மாணவர்களை சாதி, பிரதேசம் உள்ளிட்ட பாகுபாடுகள் காரணமாகத் துன்புறுத்தும் ஒரு அச்சுறுத்தலாக ராகிங் இன்று உருவாகியுள்ளது.

மும்பை ஐ.ஐ.டியைச் சார்ந்த 18 வயது மாணவர் தர்ஷன் சோலங்கி ராகிங் கொடுமை காரணமாகத் தற்கொலை செய்து கொண்டார். மேலும் பல கல்வி நிறுவனங்களில் இருந்து, இது போன்ற சம்பவங்கள் குறித்த செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன. தீர்க்கமான நடவடிக்கைகள்

# ச பாஜகவை விரட்டியடிப்போம்!

# ங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சி நடைபயணம்

## யின் தேசியக்குழு தீர்மானம்



எதுவும் மேற்கொள்ளப்படாததால் தான் ராகிங் கொடுமைகள் நடைபெறுகின்றன.

மாணவர்கள் ப்ரீத்தி மற்றும் தர்ஷன் சோலங்கி தற்கொலைக்குக் காரணமான குற்றவாளிகளைக் கண்டறிய உயர்மட்ட விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், தற்கொலைக்குத் தூண்டியவர்களுக்கு உரிய தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்றும் தேசியக் குழு வலியுறுத்துகிறது.

தற்கொலை சம்பவங்கள் நடைபெறாமல் தவிர்த்திட கல்வி நிறுவனங்களில் கவுன்செல்லிங் முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

**தீர்மானம் 6:** 1972 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி மாவட்ட மாநாட்டில் தான் முதன்முதலாக புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரப்பட்டது. அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புகளும் தற்போது ஒன்றிணைந்து மாநில அந்தஸ்து பெற வேண்டும் என்ற முனைப்பு காட்டுவதால் இந்தக் கோரிக்கை தற்போது மீண்டும் வலுப்பெற்று வருகிறது.

ஒன்றிய பிரதேச அரசாங்க சட்டத்தின்படி, பிரதேச நிர்வாகி, தனது கடமைகளை ஆற்றுவதில் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவை அவருக்குத் துணையாக ஆலோசனைகளை வழங்கும். சட்டமியற்றுவதற்கான அதிகாரத்தை ஒன்றிய பிரதேசத்தின் சட்டமன்றங்களுக்கு இந்தச் சட்டம் வழங்குகிறது. எனினும், ஒன்றிய பிரதேசத்தின் நிர்வாகி என்ற முறையில் புதுச்சேரி துணைநிலை ஆளுநரிடம் அனைத்து அதிகாரங்களும் குவிந்திருப்பதால், புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றமும், அமைச்சரவையும் செய்வதறியாத நிலையில் உள்ளன.

1981 முதல் 2021 வரையிலான ஆண்டுகளில், புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரி 16 முறை சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒன்றிய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளது. ஆனால், இதுவரையில் பலனேதும் இல்லை.

சுஷ்மா ஸ்வராஜ் தலைமையிலான நாடாளுமன்ற நிலைக்குழுவும், புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்ற பரிந்துரையை 02.06.2006 அன்று சமர்ப்பித்தது. அந்தப் பரிந்துரையும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசாங்கத்தின் நிதி மேலாண்மை கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைத் தொடர்ந்து, புதுச்சேரி நிதி நெருக்கடியில் சிக்கி நிலைகுலைந்து உள்ளது. புதுச்சேரி பிரதேசத்தின் செலவினத்தில் 90 சதவிகிதத்தை ஒன்றிய அரசாங்கம் வழங்கி வந்தது. தற்போது அது படிப்படியாக 23 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

விடுதலை அடைந்து 70 ஆண்டுகள் கடந்த பயணத்தில், புதுச்சேரி பல்வேறு துறைகளில் முன்னேறி உள்ளது. அதன் மாநில வருவாய் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி, பல்வேறு வளர்ச்சி நிலைகளையும் கண்டுள்ளது. ஆனால், மக்கள் நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்திட, ஒன்றிய அரசாங்கம் மற்றும் துணைநிலை ஆளுநரின் ஒப்புதலைப் பெற, ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் காத்திருக்க வேண்டியுள்ளது.

சட்டமன்றம் உள்ள ஒரேயொரு ஒன்றிய பிரதேசம் புதுச்சேரி தான் என்றபோதும், மாநில அந்தஸ்து இல்லை என்பதால், 15 வது நிதிக்குழுவில் புதுச்சேரி சேர்க்கப்படவில்லை (அண்மையில், ஒன்றிய பிரதேசமாக அறிவிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீர் நிதிக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது). அதற்கு நேர் எதிராக, புதுச்சேரி ஜி.எஸ்.டி கவுன்சிலில் சேர்க்கப்பட்டு இருக்கிறது.

புதுச்சேரி மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்கும் வண்ணம் புதுச்சேரி ஒன்றிய பிரதேசத்திற்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு ஒன்றிய அரசாங்கத்தை வலியுறுத்துகிறது. புதுச்சேரி மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் தேசியக் குழுக் கூட்டம் வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 7:** மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டு மேடை சார்பில் 2023 ஜனவரி 30 அன்று டெல்லியில் நடைபெற்ற தொழிலாளர் மாநாட்டினையும், அதில், பா.ஜ.க அரசாங்கத்தை அகற்றுவதற்காக ஏற்கப்பட்ட செயல்திட்டத்தையும் கட்சி கவனத்தில் கொள்கிறது.

பல்வேறு தொழிற்சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் வெளிப்படுத்திய ஒற்றுமையுணர்வு இந்தியாவின் மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

தொழிலாளர் மாநாட்டில் திட்டமிட்டவாறு நடைபெறவுள்ள போராட்ட நடவடிக்கைகளில் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இயன்ற வரையில் பங்கேற்க வேண்டும் என்று கட்சியின் தேசியக் குழு வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 8:** வெள்ளப்பெருக்கு, வறட்சி, சூறைக்காற்று, நிலநடுக்கம் இன்னபிற இயற்கை பேரிடர்கள் அதிகரித்து உள்ளது. லாப நோக்குடைய கார்ப்பரேட் பேராசை பூமண்டலத்தின் நிலைத்தன்மையைப் புறந்தள்ளுகிறது. விவசாயிகளும், ஊரகப் பகுதி தொழிலாளர்களும் மிக மோசமான பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

நவீன தாராளமய செயல்திட்டத்துடன் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க தலைமையிலான மோடி அரசாங்கம் பயிர் காப்பீட்டு திட்டத்தை பிரதான் மந்திரி பைசல் பீம யோஜனா எனும் பெயரில் முன்னெடுத்தது. இந்தத் திட்டத்தை தொடங்குவதற்கு முன்பே, பேரிடர் நிவாரண நிதியை மோடி அரசாங்கம் ஒழித்துக் கட்டியது. 13 தனியார் மற்றும் பன்னாட்டு காப்பீட்டு பெருநிறுவனங்கள் கொள்ளை லாபத்தை ஈட்டின. 2017 ஆம் ஆண்டில் இருந்து பிரதான் மந்திரி பைசல் பீம யோஜனா மூலம் இந்த நிறுவனங்கள் ஈட்டிய நிகர வருவாய் 1.25 இலட்சம் கோடி ரூபாய் ஆகும். இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட கோடிக்கணக்கான விவசாயிகள் மிகக் குறைந்த இழப்பீட்டை தான் பெற முடிந்தது. எனவே தான், அதிக தற்கொலைகள் நிகழுவதைக் காண்கிறோம்.

கார்ப்பரேட் நிறுவனங்களின் பேராசைக்காக மோடி அரசாங்கம் மேற்கொண்ட அறிவியலுக்கு விரோதமான, மக்கள் விரோத வளர்ச்சிப் பணிகளுக்கு எடுத்துக்காட்டாக இருப்பது உத்தரகாண்டில் உள்ள ஜோஷிமத் பகுதியில் நிகழ்ந்த விபரீதங்கள் ஆகும்.

இலகுவாகத் தொழில்கள் நடத்திட உதவுகிறோம் என்ற பெயரில் மோடி அரசாங்கம் ஏராளமான சுற்றுச்சூழல் விதிமுறைகளைச் சீர்குலைத்துள்ளது. 2013 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிலம் கையகப்படுத்துவதற்கான சட்டம் பல நிலைகளில் மீறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

மாசு உண்டாவதற்கு காரணமானவர்களே அதற்கான தீர்வையும் நிறைவேற்ற வேண்டும் என்ற தெளிவான செய்தியைப் பறைசாற்றும் தீர்மானத்தை ஐ.நா சபையின் COP27 மாநாடு நிறைவேற்றியுள்ளது. இதுவே உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கொள்கை ஆகும். எனவே, இயற்கை பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் நிவாரணங்கள் குறித்த கொள்கையில் திருத்தம் செய்வதற்கான தேவை இருக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு பின்வருவனவற்றை வலியுறுத்துகிறது:

மாசு உண்டாவதற்கு காரணமானவர்களே அதற்கான தீர்வையும் நிறைவேற்ற வேண்டும் என்ற கொள்கை முன்வைக்கப்பட வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க சுற்றுச்சூழல் இழப்பீடு விதிமுறைகள் மாற்றப்பட வேண்டும்.

விவசாயிகள் மற்றும் இதர ஊரக பகுதி மக்களுக்கு நியாயமான நிவாரணத்தை வழங்கிடும் சட்டமொன்று இயற்றப்பட வேண்டும்.

விவசாயிகள் விரோத பயிர் காப்பீட்டு திட்டமான பிரதான் மந்திரி பைசல் பீம யோஜனா திட்டத்தைக் கைவிட வேண்டும்; மாநில அளவிலான ஒரு புதிய திட்டத்தை உருவாக்கிட தற்போது இருக்கும் நிதியைப் பயன்படுத்த வேண்டும்.

நீதிமன்ற உத்தரவு இருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் இருந்து வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள காப்பீட்டு தொகையை உடனடியாக விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும்.

விவசாயிகளின் பயிர் காப்பீட்டு கோரிக்கைகள் குறித்து விசாரணை மேற்கொள்ள ஒரு நீதி ஆணையம் அமைத்திட வேண்டும்.

சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படக்கூடிய மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களை இந்திய அரசாங்கம் மறுபரிசீலனை செய்திட வேண்டும்.

**தீர்மானம் 9:** ஹிண்டன்பெர்க் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் அம்பானி குழும நிறுவனங்களின் முறைகேடுகள் குறித்து விசாரணை மேற்கொள்ள நாடாளுமன்ற கூட்டுக் குழுவை அமைத்திட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு வலியுறுத்துகிறது.

ஹிண்டன்பெர்க் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து பிரதமரும், நிதியமைச்சரும், மத்தியில் உள்ள பா.ஜ.க அரசாங்கமும் மவுனம் சாதித்து வருகின்றனர். எல்.ஐ.சி, எஸ்.பி.ஐ மற்றும் இதர பொதுத்துறை நிறுவனங்கள், அதானி குழும நிறுவனங்களில் பெருமளவில் முதலீடு செய்துள்ள பொதுமக்களின் பணம் அபாயத்தில் சிக்கி இருக்கிறது. மக்கள் பதில் கோருகிறார்கள். எனினும், அரசாங்கம் மவுனம் சாதிக்கிறது.

குற்றச்சாட்டுகள் மீது விசாரணை மேற்கொள்ள நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, நாடு முழுவதும் 2023 பிப்ரவரி 13 அன்று நமது கட்சி போராட்டங்களை நடத்தியுள்ளது.

**தீர்மானம் 10:** ஓய்வூதியத்திற்கான கோரிக்கை அனைவருக்குமானது. அரசாங்கம் மற்றும் பொதுத்துறையில் பணியாற்றுவோர் புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்துச் செய்துவிட்டு பழைய ஓய்வூதிய முறையைக் கொண்டு வருமாறு கோருகிறார்கள். இ.பி.எஸ்95 கீழ் உள்ளவர்கள் ஓய்வூதிய உயர்வு கோருகிறார்கள்; குறைந்தபட்ச ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு 7,500 ரூபாய் கோருகிறார்கள். விவசாயிகளும் ஓய்வூதியம் வேண்டும் என்று கோருகிறார்கள். புதிய ஓய்வூதிய திட்டம், நடைமுறையில், பயனாளிகளிடம் இருந்து பணத்தை எடுத்து, பங்குச் சந்தையில் முதலீடு செய்து விளையாடுகிறது. இவ்வாறாக, அவர்களது ஓய்வூதியத்தைப் பங்குச் சந்தை அபாயத்திற்கு உள்ளாக்கி இருக்கிறது.

ஓய்வூதிய கோரிக்கைகளை நிறைவேற்றினால் அரசாங்கம் திவாலாகிவிடும் என்று பிரதமரும், ஒன்றிய அரசாங்கமும் கூறுவது அடிப்படை ஆதாரமற்றது ஆகும். பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு அரசாங்கப் பொது நிதியில் இருந்து செலவிடப்படுவது தற்போது வெறும் 5 சதவிகிதம் ஆகும். அரசாங்கம் வாங்கியுள்ள கடன்களுக்கான வட்டித் தொகையைச் செலுத்திட அரசாங்கப் பொது நிதியில் இருந்து செலவிடப்படுவது தற்போது சுமார் 27 சதவிகிதம் ஆகும். மேலும் எந்தவொரு ஓய்வூதிய திட்டமானாலும், பயனாளிகளிடம் உள்ள பணம் மீண்டும் சந்தை சுழற்சிக்குள் திரும்ப வந்துவிடும். மூழ்கிக் கொண்டிருக்கும் பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்த நிலை அவசியத் தேவை ஆகும்.


பல மாநில அரசாங்கங்கள் பழைய ஓய்வூதிய திட்டத்தைக் கொண்டுவரவுள்ளதாக அறிவித்துள்ளன. ஆனால், புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் செலுத்தியுள்ள தொகையைத் திருப்பி அளித்திட ஒன்றிய அரசாங்கம் தயாராக இல்லை. எனவே, மாநில அரசாங்கங்கள் பழைய ஓய்வூதிய திட்டத்தைத் தொடங்கிடுவதற்கு ஏற்ப, தொழிலாளர்கள் செலுத்திய பங்களிப்புகளை ஒன்றிய அரசாங்கம் மாநில அரசாங்கங்களிடம் திரும்பச் செலுத்திட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு வலியுறுத்துகிறது.

அரசாங்கம் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைக் கட்சியின் தேசியக் குழு ஆதரிக்கிறது. பணக்காரர்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அதிக வரி விதிப்பதன் மூலம் ஓய்வூதியம் வழங்குவதற்குத் தேவையான நிதியைத் திரட்ட வேண்டும் என்று கட்சி முன்மொழிகிறது.



அ.பாஸ்கர்

# தியாக வாழ்வின் மனித சாட்சி



தோழர் எம்.காத்தமுத்து

**ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் முக்கிய நகரமான மயிலாடுதுறையில் 1918ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் நாள். மாணிக்கம் செட்டியார் – நாகரத்தினம் தம்பதியினருக்கு மூத்த மகனாக பிறந்தவர் தோழர் மா.காத்தமுத்து.**

மயிலாடுதுறை நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் பள்ளிப் படிப்பை பெற்ற எம். காத்தமுத்து பயிலும் காலத்திலேயே நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈர்க்கப்பட்டார். உரிய வயதை அடைந்ததும் காங்கிரஸ் இயக்கத்தில் உறுப்பினராக இணைந்து செயல்படத் தொடங்கினார்.

தாய்மாமன் வீட்டில் வாழ்ந்து வந்த காத்தமுத்து குடும்பச் சூழல் காரணமாக வேலைக்கு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

நாகப்பட்டினத்தில் ரயில்வே தொழிலாளியாக வேலைக்குச் சேர்ந்து பணிபுரிய தொடங்கினார். இங்கு ரயில்வே தொழிலாளர்களை அணிதிரட்டி, தொழிற்சங்க இயக்கத்தில் முனைப்போடு செயல்பட்டார். இதன் மூலம் சமூகம் குறித்த புதிய பார்வை பெற்று, தொழிலாளி வர்க்கத்தின் ஆற்றலை ஒருங்கிணைப்பதில் தீவிரமாக செயப்பட்டு வந்தார்.

1947இல் நாடு விடுதலை பெறும் சூழலில், தாய்நாடு பிளவுபட்டது. ஆங்கில அரசு பாக்கிஸ்தான்– இந்தியா என இரு நாடுகளாக்கியது.

இதன் காரணமாக இந்து – முஸ்லிம் மோதல்கள் கலவரங்களாக வெடித்தன. நாட்டின் எல்லைப் பகுதி முழுவதும் மனித இரத்தம் கொட்டியது. மண்ணில் விழுந்த ரத்தம் மத பேதங்களை நிராகரித்து ஒன்று கலந்தன.

பாகிஸ்தான் – இந்தியப் பகுதிகளை இணைத்து வந்த ரயில் போக்குவரத்து முற்றிலுமாக துண்டிக்கப்பட்டது. இதனால் படுகொலைகள், உயிரிழப்புகள் அதிகரித்து வந்தன.

இந்தக் கலவரப் பகுதிகளில் இருந்த இந்துக்களும், முஸ்லிம்களும் தங்களின் உயிருக்கு பயந்து ரயிலை ஓட்ட மறுத்தனர். அந்த சமயத்தில் இந்திய பிரதமர் ஜவகர்லால் நேரு ரயில்வே தொழிலாளர்களுக்கு.

“சுதந்திரம் அடைந்த நமது நாடு பேராபத்தில் இருக்கிறது. நாகரீக உலகம் ஏற்றுக் கொள்ள முடியாத பயங்கரப் படுகொலைகள் நடந்து கொண்டிருக்கிறது. அந்தந்த எல்லைகளுக்கு செல்ல வேண்டிய மக்கள் போக்குவரத்து வசதி இன்றி தவிக்கிறார்கள், இந்த ஆபத்தான நிலையில் தாய் நாட்டிற்கு சேவை செய்ய தேசபக்தி மிக்க கடமையாற்ற ரயில்வே தொழிலாளர்கள் முன் வர வேண்டும்” என உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்.

நேருவின் வேண்டுகோளை ஏற்று தமிழ்நாட்டில் இருந்து ரயில்வே தொழிலாளர்கள் ரயிலை ஓட்ட பஞ்சாப் செல்கிறார்கள்.

சுமார் ஐந்து மாத காலம் ரயில் வண்டிகளை ஓட்டி லட்சக்கணக்கான இந்துக்களையும், முஸ்லீம்களையும், கொலைவெறியர்களிடமிருந்து பாதுகாத்து அவரவர் விரும்பிய பகுதிகளில் கொண்டு சேர்த்தபெருமை தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்களுக்கு உண்டு.

இத்தகைய உருக்கு போன்ற மன உறுதி படைத்த தொழிற்சங்க இயக்கத்தின் முன்னணி தலைவராக செயல்பட்டவர் எம்.காத்தமுத்து. தனது பொது வாழ்வுப் பயணத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை தேர்வு செய்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாவட்ட முதல் மாநாடு 1947 டிசம்பர் 29, 30 தேதிகளில் கும்பகோணத்தில் நடைபெற்றது மாவட்டம் முழுவதும் இருந்து இயக்கத்தின் போர் வீரர்களாக 400 தோழர்கள் கலந்து கொண்டனர்.

**அன்று முதல் தஞ்சை மாவட்டத்தில் செங்கொடி இயக்கத்தை கட்டுவதற்கும், பண்ணை நிலப்பிரபுக்களின் அடிமையாய் வாழ்ந்த “பண்ணையாட்களை” மக்களை “அடித்தால் திருப்பி அடி” என தைரியம் தந்து, பண்ணையாட்களின் அடிமை விலங்கை உடைத்தெறியும் பணியில் ஈடுபடத் தொடங்கினார்.**

தோழர்.பி.சீனிவாசராவோடு 12 ஆண்டுகள் இணைந்து பணியாற்றி பல்வேறு அனுபவங்களை கற்றுணர்ந்துவர்.

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் 17 ஆண்டுகள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளராக பணியாற்றியவர். எளிமை, நேர்மை என்ற இலக்கணத்திற்கும், தியாக வாழ்வின் மனித சாட்சியகவும் வாழ்ந்து காட்டியவர். வர்க்கப் போராட்ட வழியில் களம் பல கண்டு வெற்றி கண்ட தீரர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக சேர்ந்தவர். கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர், மாநிலக் குழு உறுப்பினர், மாநில நிர்வாகக் குழு மற்றும் செயற்குழு உறுப்பினர் என தொடர்ந்து தேசியக் குழு உறுப்பினராக உயர்ந்தவர்.

இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் அகில இந்திய தலைவர், பொருளாளர், தமிழ்நாடு மாநிலச் செயலாளர் என வர்க்க அமைப்பிலும் வரலாறு படைத்தவர்,

நாகபட்டினம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பில் ஆறாண்டுகள் பணியாற்றி, காவிரி நதிநீர் உரிமைப் போராட்டத்திற்கு அடித்தளமிட்டவர், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் பிரச்சினைகளை பேசும் “உழவு செல்வம்” பத்திரிக்கையின் ஆசிரியராக செயல்பட்டவர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் கட்டுப்பாட்டு குழு தலைவர் பொறுப்பிலும் மா.காத்தமுத்து செயல்பட்டார்.

சொகுசு வாழ்க்கையை ஒரு போதும் விரும்பாத மனிதர், நான்கு முழ வேட்டி, ஜிப்பா அவரின் எளிய உடை.

ஒன்று பட்ட தஞ்சை மாவட்டத்தில் அவர் கால் பதியாத தெருக்கள் எதும் இல்லை.

தஞ்சை மாவட்டம் முழுவதும் கம்யூனிஸ்ட் பேரியக்கத்தை கட்டமைத்து, கிராமங்கள் வீறுநடை போட வைத்தவர் “ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு வரலாறு உண்டு” என்பதை தனது எழுத்தின் மூலம் எடுத்துரைத்தவர்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வர்க்கப் போராளியாக கடைசி வரை திகழ்ந்தார். 73 ஆண்டுகள் வாழ்ந்த அவர், 56 ஆண்டுகள் தமக்கென வாழாமல் பொதுவாழ்வில் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டி பொதுவாழ்க்கைக்கு பெருமை சேர்த்தவர்.

**கண்ணியமிக்க மனிதராக கடைசிவரை, நெறி சார்ந்து வாழ்ந்த புரட்சியாளராக திகழ்ந்தார் தமது குடும்பத்திற்கு என எதனையும் செய்து கொள்ளாதவர். அவர் வாழ்நாளில் அவருக்கு பலரும் அளித்த கௌரவ பட்டம் “பிழைக்கத் தெரியாத மனிதர்” என்பதே!**

ஆம் அதனை விட மேலான பட்டம் எதுவும் இருக்க முடியாது.

தோழர் எம்.காத்தமுத்து அவர்களின் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களும், அரசியல் வாழ்வில் அவர் கையாண்ட வழிமுறைகளை நாம் கற்றுக் கொள்வது அவசியமாகும்.

பிப்.26 அவரது நினைவு நாள்.

தொடர்புக்கு: 94884 88339

# “உலக சமாதானம், மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவர்கள் மருத்துவப் பணியாளர்களின் உரிமைகள் கருத்தரங்கம்

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம், சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் சங்கம், அகில இந்திய முற்போக்குப் பேரவை, பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச்சங்கம் சார்பில் பிப். 25 அன்று சென்னை இக்ஸா மையத்தின், மாநாட்டு அரங்கில் “உலக சமாதானம், மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவர்கள் மருத்துவப் பணியாளர்களின் உரிமைகள்” குறித்தக் கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கிற்கு, ஏ.ஐ.பி.எஃப் தமிழ்நாடு மாநிலத் தலைவர், சிறு நீரக மருத்துவ நிபுணர் டாக்டர் என். வெங்கடேஷ் தலைமை தாங்கினார்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநிலப் பொருளாளர், மயக்க மருத்துவ நிபுணர் டாக்டர் ஜி.ரமேஷ், பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச்சங்கத்தின் அகில இந்தியத் தலைவர், பி.காளிதாசன், முதுநிலை மருத்துவ மாணவர் டாக்டர் எம்.அஜாய் முகர்ஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அரசு அனைத்து டாக்டர்கள் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் டாக்டர் எஸ்.சக்திராஜன் வரவேற்புரையாற்றினார்.

“உலக சமாதானமும், நலவாழ்வும்” என்ற தலைப்பில், உலக சமாதானத்திற்கான நோபல் பரிசுப்பெற்ற, அணுப்போர் தடுப்பிற்கான சர்வதேச டாக்டர்கள் சங்கத்தின் இணைத் தலைவரும், சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் சங்கத்தின் மூத்த துணைத் தலைவருமான டாக்டர். அருண்மித்ரா உரையாற்றினார்.

“மக்கள் நல்வாழ்வை பாதிக்கும் ஆயுதப் போட்டி” என்ற தலைப்பில் அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின் அகில இந்தியப் பொதுச் செயலாளர், மார்க்சிய அறிஞர் அனில் ராஜிம் வாலே உரையாற்றினார்.

“மக்கள் நல்வாழ்விற்கு எதிரான ஒன்றிய பட்ஜெட்” என்ற தலைப்பில் ஏ.ஐ.பி.எஃப் அகில இந்திய துணைத் தலைவர் கிருஷ்ண ஜா, “இளம் மருத்துவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள்” என்ற தலைப்பில், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், “முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கு எதிரான கட்டாயப் பணி” என்ற தலைப்பில் ஐ.டி.பி.டி அகில இந்தியச் செயலாளர், டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, “காவி மயமாக்கப்படும் மருத்துவத்துறை மக்கள் நலனுக்கு எதிரானது” என்ற தலைப்பில், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் த.அறம், “அரசு மருத்துவர்களின் கோரிக்கைகள் நிறைவேற என்ன செய்ய வேண்டும்?” என்ற தலைப்பில், புற்று நோய் சிகிச்சை சிறப்பு மருத்துவ நிபுணர் மற்றும் அரசு அனைத்து டாக்டர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் சி.சுந்தரேசன், “கார்ப்பரேட் மயமாகும் மருத்துவம்” என்ற தலைப்பில், மனநல மருத்துவ நிபுணர் மற்றும் அரசு அனைத்து டாக்டர்கள் சங்கத்தின் மாநிலப் பொருளாளர் டாக்டர் ஆர்.ஜெயசீலன், “முதுநிலை மருத்துவ மாணாக்கர்களின் பிரச்சனைகளும் தீர்வுகளும்” என்ற தலைப்பில், தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் டாக்டர் எம்.கீர்த்திவர்மன், “பல்மருத்துவர்கள், பல்மருத்துவ மாணவர்களின் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள்” என்ற தலைப்பில், சென்னை அரசு பல்மருத்துவக் கல்லூரியின் இறுதி ஆண்டு, பல் மருத்துவ மாணவரும், தமிழ்நாடு பல் மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் மாநில அமைப்பாளருமான ஸ்ரீநாத் வாசுதேவன், “வெளிநாட்டில் மருத்துவம் பயிலும் மாணவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள்” என்ற தலைப்பில், தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் வெளிநாட்டுப் பிரிவு செயலாளர் டாக்டர் எம்.செந்தில் குமார், செவி லியர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பாக எம்.ஆர்.பி கோவிட் செவி லியர்கள் சங்கத் தலைவர் உதயக்குமார்,

மருத்துவப்பணியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து, பார்மஃபியூஷன் பயிற்சி டெக்னாலஜிஸ்ட் ஐஸ்வர்யா ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

முதுநிலை மருத்துவ மாணவர் டாக்டர் பி. விஷ்ணு நன்றியுரையாற்றினார்.

கருதரங்கில், உரிய விவாதத்திற்குப் பிறகு, கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மருத்துவக் கல்வி மருத்துவ சேவையில் மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப் படுவதை தடுத்திட வேண்டும்...

இளம் மருத்துவர்களின் வேலை வாய்ப்பை பறிக்கும் நோக்குடன், முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கு, படிப்பின் பொழுதே மூன்று மாத காலம், மாவட்ட மற்றும் இதர அரசு மனைகளில் ,கட்டாயப் பணி வழங்கும் திட்டத்தை ,ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் கைவிட வேண்டும்...

மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்களை ஒப்பந்த, தற்காலிக, அவுட்சோர்சிங் முறைகளில் பணிநியமனம் செய்வதை கைவிட்டு, நிரந்தர அடிப்படையில் நியமித்திட வேண்டும்...

மருத்துவக் கல்வி மருத்துவ சேவை தனியார் மயமாவதை, கார்ப்பரேட் மயமாவதை, காவிமயமாவதை தடுத்திட வேண்டும்...

உலக மக்களின் நலவாழ்விற்கு அச்சுறுத்தலாக உள்ள, ரஷ்ய உக்ரைன் (நேட்டோ) போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்...

ரஷ்ய உக்ரைன் பிரச்சனைக்கு பேச்சு வார்த்தையின் மூலம் அமைதி வழியில் அரசியல் தீர்வு காண வேண்டும்...

நேட்டோ ராணுவக் கூட்டணி உட்பட, அனைத்து ராணுவக் கூட்டணிகளையும் கலைக்க வேண்டும்...

அணு ஆயுதங்கள் உட்பட அனைத்து பேரழிவு ஆயுதங்களையும் உலகை விட்டு அகற்றிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தோழர் தா.பாண்டியன் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள், மற்றும் மூத்த தலைவர் எம்.காத்தமுத்து முன்னாள் எம்.பி. 32 வது நினைவு நாள் நிகழ்வு 26.02.2023 அன்று சென்னை, தி.நகர், செவாலியே சிவாஜி கணேசன் சாலையில் உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில அலுவலகத்தில் நடைபெற்றது.

கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி., துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட முன்னணியினர் கலந்து கொண்டனர்.

**சிவகிரி:** சிவகிரியில் நகரச் செயலாளர் பி.பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். தென்காசி மாவட்ட செயலாளர் தி.இசக்கித்துரை, மாவட்டக் குழு உறுப்பினர்கள் கோவிந்தன், வீ.ராஜேந்திரன், நகர துணைச்செயலாளர் குருவு, இளைஞர் பெருமன்ற செயலாளர் க.பு.பால்சாமி மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

இராயகிரியில் நடந்த இரங்கல் நிகழ்ச்சிக்கு நகரசெயலாளர் வி.சின்ன வேல்சாமி தலைமை தாங்கினார். ஏஐடியூசி மாநில தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், தென்காசி மாவட்ட செயலாளர் டி. இசக்கித்துரை, மாவட்ட ஏஐடியூசி பொதுச்செயலாளர் டி.சுப்பையா, மாவட்ட துணைச்செயலாளர் வேலாயுதம், வாசு ஒன்றிய செயலாளர் பி.வேலு, மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கிட்டப்பா, பரமசிவன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி மேற்கு பகுதி குழு 9 வது வார்டு கிளை சார்பாக கிளை செயலாளர் ரா. ஆனந்தன் தலைமையில் நாச்சியார் கோயில் அருகில் தா.பா. இரண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 23வது மாமன்ற உறுப்பினர் க. சுரேஷ், மாநகர மாவட்ட செயலாளர் எஸ். சிவா ஆகியோர் புகழஞ்சலி செலுத்தினர்.

**தருமபுரி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டார குழு, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் பழைய பேருந்து நிலையம் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தா. பா திருவுருவப்படத்திற்கு தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க மாநில சிறப்பு தலைவர் ந. நஞ்சப்பன் எக்ஸ்.எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட குழு உறுப்பினர் முனியப்பன் தலைமை தாங்கினார். இதில் மாவட்ட பொருளாளர் வழக்கறிஞர் சி. மாதையன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் எம்.கோபால்,எம்.ஏ.காதர், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்ட பொறுப்பாளர் கதிரவன், சிபிஐ ஒன்றிய செயலாளர் சம்பத், ஒன்றிய பொருளாளர் முத்து, ஒன்றிய துணை செயலாளர் சதீஸ், நகர துணை செயலாளர் தர்மராஜா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தருமபுரி மாவட்டக்குழு சார்பில் தருமபுரி தொலைபேசி நிலையம் மற்றும் நான்கு ரோடு பகுதியில் தா.பா. உருவ படத்திற்கு மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாவட்ட துணை செயலாளர் எம்.மாதேஸ்வரன், மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஏ.மாது, ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி, இண்டூர் வட்டார செயலாளர் மாது, துணை செயலாளர் மாதையன் உள்ளிட்ட பலர் மலர்தூவி மரியாதை செய்தனர்.

இண்டூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வட்டார செயலாளர் மாது தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இதில் மாவட்ட துணை செயலாளர் எம்.மாதேஸ்வரன், மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி, துணை செயலாளர் மாதையன், நிர்வாகிகள் பி.டி.அப்புனு, சரவணன், சின்னராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இலளிகத்தில் நடந்த நிகழ்ச்சியில் மாவட்டக்குழு உறுப்பினர் எல்.ஆர். கிருஷ்ணராஜ் தலைமையில் பொன்னியப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதே போல் பென்னாகரம், அரூர் உள்ளிட்ட இடங்களில் தா.பா உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் வட்டார செயலாளர் எம்.பெருமாள் தலைமையில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சிவலிங்கம்,புள்ளாறு,துணை செயலாளர் கோவிந்தசாமி, சி.பெருமாள், கட்டுமான சங்க மாவட்ட துணை தலைவர் முருகேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் இலளிகம் தியாகி ஆர்.பச்சாகவுண்டர் நினைவு படிப்பகத்தில் தா.பா இரண்டாமாண்டு நினைவு தினம், எம்.காத்தமுத்துவின் 32 ஆம் ஆண்டு நினைவு தின கருத்துரைக் கூட்டம் எல்.சி. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஜெ.பிரதாபன், வெ.பை.மாதையன், ஆகியோர் கருத்துரை வழங்கினர். வி.தொ.ச. ஒன்றிய செயலாளர் என்.முருகேசன், ஜி.சம்பத், கோவிந்தம்மாள், காளியம்மாள், தணிகாசலம் மற்றும் பலர் கலந்துக் கொண்டனர். அலமேலு எத்துராஜ் நன்றி தெரிவித்தார்.

**மதுரை:** மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள டேவிட் பண்ணையில் உள்ள தா.பாண்டியன் நினைவிடம் மற்றும் திருவுருவப்படத்திற்கு குடும்பத்தினர் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் காளிதாஸ், புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேல், மாவட்டக் குழு உறுப்பினர் மகாராஜன், ஜெயக்கொடி, கல்யாணி, சின்னச்சாமி மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மாவட்டக் குழு உறுப்பினர்கள், ஏ.ஐ.டி.யு.சி, விவசாய சங்கத்தினர், மாதர் சங்கத்தினர் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் மலர் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

**மணப்பாறை:** மணப்பாறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலக வளாகம் முன்பு தா.பா இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி கூட்டம் நடைபெற்றது.

நகர செயலாளர் ஜனசக்தி உசேன் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் தங்கராசு முன்னிலை வகித்தார். முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.இந்திரஜித் மலர் துவி புகழ் அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

**சத்தியமங்கலம்:** சத்தியமங்கலத்தில் நடைபெற்றதா.பா.நினைவு நாள் நிகழ்ச்சியில் பேராசிரியர், முனைவர்.க.பழனித்துரை பங்கேற்றுப் பேசினார்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் இந்திய கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்தில் தா.பாண்டியன், எம்.காத்தமுத்து ஆகியோருக்கு மாநகர செயலாளர் ரா.பிரபாகர் தலைமையில், ஏஐடியூசி தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.சந்திரகுமார் மலர் அஞ்சலி செலுத்தினார். மூத்த தோழர் ஜி. கிருஷ்ணன் இரு பெரும் ஆளுமைகள் குறித்து புகழ் அஞ்சலி உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் பாலசுப்ரமணியன், மாவட்ட நிர்வாக குழு வி.சேவையா, இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் கார்ல் மார்க்ஸ் மற்றும் மாவட்ட குழு பி.குணசேகரன் மற்றும் நகர தோழர்கள் கலந்து கொண்டு புகழ் அஞ்சலி செலுத்தினர்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் தா.பா. திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்பட்டது. மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் சீர்காழியில் கலந்து கொண்டு தா.பா. குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இதில் சீர்காழி ஒன்றிய செயலாளர் வே.நீதிசோழன், வி.ச.மாவட்ட செயலாளர் பெ.வீரராஜ், மாவட்ட துணை செயலாளர் கே.ராமன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**குடியாத்தம்:** தா.பாண்டியன், குடியாத்தம் டாக்டர் கண்ணபிரான் நினைவுநாளை முன்னிட்டு குடியாத்தம் கட்சி அலுவலகத்தில் நகர செயலாளர் ஆனந்தன் தலைமையில் படத்திறப்பு நிகழ்ச்சி நடந்தது. ஒன்றிய துணை செயலாளர் தங்கவேலு, ஜீவா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## சுயநலமற்ற வாழ்வை தேடிக்கொண்ட ஞானி தா.பா. சாலமன் பாப்பையா புகழாரம்




தோழர் தா.பாண்டியன் இரண்டாம் ஆண்டு நினைவுதினம் மதுரை புறநகர் மாவட்டம் சார்பில் அனுசரிக்கப்பட்டது. அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக்கழகம் மற்றும் இந்திய கலாச்சார நட்புறவு கழகம் சார்பில் நடைபெற்ற புகழ் அஞ்சலிக் கூட்டத்திற்கு அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் மாவட்டச் செயலாளர் என்.ஜீவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியின் மாவட்ட செயலாளர்கள் எம்.எஸ்.முருகன், பி.முத்துவேல், சி.அன்பரசு, இஸ்கப் மாவட்டச் செயலாளர் ஆர்.ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் தா.பா.டேவிட் ஜவகர் வரவேற்றுப் பேசினார்.

கூட்டத்தில் இஸ்கப் மாநில துணைத்தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெ.அழகர்சாமி, இஸ்கப் மாநில செயலாளர் எழுத்தாளர் த.இந்திரஜித், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் இராஜலெட்சுமி, தமிழ்ச்செம்மல் புலவர்.வை.சங்கரலிங்கம் அரிமா முன்னாள் ஆளுநர் பொறியாளர் அ.அறிவழகன், ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்டத்தலைவர் எம்.நந்தாசிங், சமாதான ஒருமைப்பாட்டுக்கழகம் வி.விருமாண்டி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உசிலம்பட்டி ஒன்றிய செயலாளர் வி.ஜெயக்கொடி, திராவிட கழகம் மன்னர் மன்னன், பார்வேர்ட் பிளாக் ஐ.ராஜா சிபிஎம் செல்லக்கண்ணு ஆகியோர் புகழாரம் செலுத்தினர்.

இறுதியாக சிறப்புரை நிகழ்த்திய தமிழறிஞர் சாலமன் பாப்பையா பேசும்போது;

என்னைப்போலவே தா.பாண்டியனும் பேராசிரியராக பணியாற்றினார், இன்னும் கூடுதலாக இருமொழி ஆளுமை மிக்கவராகவும் இருந்தார். அன்றைய காலகட்டத்தில் பொதுவுடமை இயக்கத்தில் இருப்பது மிககடினம், ஆனாலும் மனிதகுல விடுதலைக்கான கொள்கையை விடவில்லை வேலையைத்தான் விட்டார்.

ஆசிரியப்பணியை விட்டாரே தவிர கற்பித்தலை நிறுத்தவில்லை. இறுதிமூச்சுவரை கற்றார். தான் கற்றதை சாமானிர்களுக்கும் கற்றுத் தந்தார். எனவே எப்போதும் கற்பிப்பவராகவே இருந்தார். தான் உண்டு, தன்பிள்ளை, தன் வீடுண்டு என்று வாழாமல் பல இழப்புகளை சந்தித்தபோதும் ஒரு ஞானி போல் வாழ்ந்தவர் தா.பாண்டியன் என்று கூறினார்.

விழாவில் தா.பா. நினைவு அறக்கட்டளை சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது ஜெ.அன்பு கிறிஸ்டியான் அவர்களுக்கும், நல்லாசிரியர் விருது பெற்ற மா.முருகேஸ்வரி பாலசுப்பிரமணி, கல்வி கொடையாளர் வி.கணேசன் விஸ்வநாதன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது, இறுதியாக செ.ஜோதிபாசு நன்றி கூறினார்.





# ஏஐடியூசி ஆட்டோ சங்கம் துவங்க விழா



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ரவுன்டானா அருகில், ஏஐடியூசி லோடு ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தின் கிளை துவக்க விழா, கொடியேற்று விழா மற்றும் பெயர் பலகை திறப்பு விழா கிளைத் தலைவர் பி. ராஜா தலைமையில் நடைபெற்றது.

கிளை நிர்வாகிகள் ஹரி, எஸ்.வெங்கடேசன், லோகநாதன், முத்துமாரி, எஸ்.செல்லப்பன், சையத்அலி, மணிகண்டன் உள்ளிட்ட தோழர்கள் முன்னிலை வகித்தனர்.

சங்கத்தின் கொடியை மாவட்ட செயலாளர் க.ஜெகதீசன் ஏற்றி வைத்தார். பெயர் பலகையை மாவட்ட துணை செயலாளர் இரா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மூத்த தோழர் சி.சக்கரபாணி, சிபிஐ தொகுதி செயலாளர் எம்.பார்த்திபன், சட்ட ஆலோசகர் மோ.வெங்கடேசன், மாவட்டத் துணைத் தலைவர் எஸ்.சந்தோஷ் மாவட்ட பொருளாளர் டி.சுரேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கிளை செயலாளர் வி.எம். வெங்கடேசன் நன்றி கூறினார்.

# குமரி கே.சந்திரபாபு நினைவுநாள் கூட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மஞ்சாலுமூடு கிளையின் சார்பில், முன்னாள் மாவட்ட செயலாளர் கே.சந்திரபாபுவின் நினைவுநாள் பொதுக்கூட்டம் கிளைச் செயலாளர் எப்.மரியதாஸ் தலைமையில் நடைபெற்றது. குமரி மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ், ஏ.ஐ.டி.யூ.சி. மாநிலத் தலைவர் காசி விஸ்வநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கேரள மாநில பீர்மேடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழுத்தூர் சோமன் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மறைந்த சந்திரபாபு நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. காரோடு கிளையில் மறைந்த ஷாஜி குடும்பத்துக்கு ரூ.15000 குடும்ப நிதி வழங்கப்பட்டது. பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் சிபிஐ மாவட்ட துணை செயலாளர் ஜி.சுரேஷ் மேசியதாஸ், ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட தலைவர் எஸ்.அனில்குமார், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்ட அமைப்பாளர் ஆர்.செல்வராணி, த.க.இ.பெ. மாவட்டத் துணைத்தலைவர் ஆரல் பகவதி, சிபிஐ நாகர்கோவில் மாநகர செயலாளர் ஆர். இசக்கிமுத்து, சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் பிரேமா கிருஷ்ணன், சிபிஐ மேல்புறம் ஒன்றிய கவுன்சிலர் ஏ.டென்னிசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.ஜெ.ஜெயராஜ் நன்றி கூறினார்.

மணப்பாறையில்

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சிறப்பு பேரவை

மணப்பாறை விராலிமலை சாலையில் உள்ள வெற்றி தனி பயிற்சி கல்லூரி வளாகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி புறநகர் மாவட்டம் மணப்பாறை நகரம், ஒன்றியம், மருங்காபுரி கிளைகளின் செயலாளர்கள், இடைக்கமிட்டி உறுப்பினர்கள் சிறப்பு பேரவை கூட்டம் நடைபெற்றது.

இப் பேரவைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மணப்பாறை ஒன்றிய செயலாளர் தங்கராசு தலைமை வகித்தார். நகர செயலாளர் ஜனசக்தி உசேன், மருங்காபுரி ஒன்றிய செயலாளர் வெள்ளகண்ணு ஆகியோர் முன்னிலை வகித்தனர். புறநகர் மாவட்ட துணைச் செயலாளர், நகர்மன்ற உறுப்பினர் தங்கமணி அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

முன்னாள் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் த.இந்திரஜித், மாவட்ட செயலாளர் ராஜ்குமார், துணைச் செயலாளர் பழனிச்சாமி ஆகியோர் மாநில நிர்வாகக்குழு மாவட்டச் செயலாளர்கள் கூட்ட முடிவுகள், இன்றைய அரசியல் குறித்து உரைநிகழ்த்தினர்.

மயிலாடுதுறை மாவட்டம்

# சீர்காழி ஒன்றியத்தில் நிதியளிப்பு பேரவை

சீர்காழி ஒன்றியத்தில் நிதியளிப்பு பேரவை ஒன்றிய செயலாளர் நீதி சோழன் தலைமையில் நடைபெற்றது. இதில் நிதியினை மாவட்ட செயலாளர் பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றினார்.

வி.ச.மாவட்ட செயலாளர் பெ.வீரராஜ், கே.ராமன் மாவட்ட குழு உறுப்பினர், எஸ்.சுந்தரய்யா வி.ச.ஒன்றிய செயலாளர், கே.வரதராஜன் ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர், ப.ஜெயகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

# இலங்கை கடற்படையின் தொடர் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்


மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடித்து வந்த நேரத்தில், இலங்கை கடற்படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் மீன்பிடி கருவிகள், பேட்டரிகள், ஜி.பி.எஸ். கருவிகளையும் இலங்கை கடற்படையினர் எடுத்துச் சென்றுள்ளனர். இந்தத் தாக்குதலில் படுகாயம் அடைந்த மீனவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப் பெற்று, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இலங்கை கடற்படையினர் சர்வதேச விதிமுறைகளையும், வழிவழியாக பின்பற்றி வரும் மரபுகளையும் தொடர்ந்து அத்துமீறி வருகின்றனர். இது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சரும் ஒன்றிய அரசும் தலையிட்டு, நிரந்தர தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி வருகிறார். ஆனாலும் பாஜக ஒன்றிய அரசு தமிழ்நாடு மீனவர்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும், வாழ்வுரிமைக்கும் பாதுகாப்பு வழங்குவதில் போதிய அக்கறை காட்டாமல், அலட்சியப்படுத்தி வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கண்டிப்பதுடன், ஒன்றிய அரசின் அயலுறவுத்துறை தமிழக மீனவர்கள் உயிரையும், உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

மார்ச் 21 தஞ்சாவூரில்

# ஏஐடியூசி போக்குவரத்து கழக ஓய்வூதியர் சம்மேளன மாநில மாநாடு!



அரசு போக்குவரத்து கழக ஏஐடியூசி ஓய்வு பெற்றோர் சங்க மாநில நிர்வாகிகள் கூட்டம் தஞ்சாவூர் ஏஐடியூசி மாவட்ட அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்க மாநில துணைத்தலைவர் துரை. மதிவாணன் தலைமை வகித்தார். மாநில ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர் பி.அப்பாத்துரை முன்னிலை வகித்தார்.மாநில பொதுச் செயலாளர் ஆர்.ஆறுமுகம் நடைபெற்ற பணிகள் குறித்தும், மார்ச் 21 தஞ்சாவூரில் நடைபெறும் ஓய்வூதியர் சங்க மாநில மாநாடு குறித்தும் விளக்கி பேசினார்.

ஏஐடியூசி மாநில செயலாளர் ஆர்.தில்லைவனம், மாவட்ட தலைவர் வெ.சேவையா, மின்வாரிய சம்மேளன மாநில துணைத்தலைவர் பொன்.தங்கவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கும்பகோணம் ஓய்வூதியர் சங்க தலைவர் மல்லி. ஜி.தியாகராஜன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். முடிவில் துணைத் தலைவர் கே.சுந்தரபாண்டியன் நன்றி கூறினார். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற சுமார் 90 ஆயிரம் ஓய்வூதியர்கள் உள்ளனர். இவர்களில் பல ஆயிரம் ஓய்வூதியர்கள் எந்தவித ஓய்வூதிய உயர்வும், பலனும் அனுபவிக்காமல் இறந்து விட்டனர். தற்போது சுமார் 86 ஆயிரம் ஓய்வூதியர்களும், அவர்களின் பல லட்சக்கணக்கான குடும்ப உறுப்பினர்களும் உள்ளனர்.

ஓய்வூதியர்களுக்கு, கடந்த 2008இல் தமிழ்நாடு அரசு நியமித்த பென்ஷன் சீரமைப்பு குழு பரிந்துரை அடிப்படையில் தற்போது வழங்கப்படும் ஓய்வூதியத்தை அரசே பொறுப்பு ஏற்று வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சாகுபடியாளர்களுக்கு நில உரிமை கோரி ஆர்ப்பாட்டம்



வழிபாட்டுத்தலங்கள், அறக்கட்டளைகள் மடங்கள் மற்றும் சத்திரங்களுக்கு சொந்தமான நிலங்களில் குத்தகை சாகுபடிதாரர்கள் மற்றும் குடியிருப்பவருக்கே நில உரிமை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அரியலூர் மாவட்டம் ஸ்ரீபுரம் தான் ஊராட்சி மன்ற தலைவர் உலகநாதன் தலைமை தாங்கினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் டி.மணிவாசகம் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்.

அரியலூர் மாவட்ட செயலாளர் சொ.ராமநாதன், துணை செயலாளர் ப.கலியபெருமாள் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்.

# அரசு மருத்துவமனைகளில் பிரசவத்தின்போது தாய்சேய் மரணங்கள் நிறுத்தப்பட வேண்டும்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் வட்ட பேரவைக் கூட்டம் நடைபெற்றது. பழனியம்மாள் தலைமைவகித்தார். விஜயலட்சுமி முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் பாண்டிச்செல்வி மாநிலக்குழு முடிவுகளை விளக்கி பேசினார். மாவட்ட தலைவர் மாரீஸ்வரி வேலைத்திட்டம் குறித்த பேசினார்.

சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாநிலக்குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றிய செயலாளர் சக்கனன் ,நகர செயலாளர் முத்துக்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் 2 இடங்களில் பிரசவத்தின்போது தாய்சேய் மரணங்கள் நடந்துள்ளது. வருங்காலங்களில் இது தவிர்க்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# "சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வளர்ச்சிக்கான அணுகுமுறை" கருத்தரங்கம்

அனைத்திந்திய முற்போக்குப் பேரவை சார்பில் "சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வளர்ச்சிக்கான அணுகுமுறை" குறித்த தேசியக் கருத்தரங்கம் நாக்பூரில் நடைபெற்றது.

அனைத்திந்திய முற்போக்குப் பேரவை என்பது அகில இந்திய அளவில் செயல்படும் அரசியல் கட்சிகளை சாராத அமைப்பாகும்.

இந்த அமைப்பின் சார்பில், மனித குல வாழ்விற்கும், புவியில் வாழும் உயிரினங்கள் அனைத்திற்கும் மிகப்பெரும் சவாலாக, அச்சுறுத்தலாக இருக்கும் காலநிலை நெருக்கடி ,சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் வளர்ச்சிக்கான அணுகுமுறை குறித்த தேசியக் கருத்தரங்கம் நாக்பூரில், 2023 பிப்ரவரி 17, 18 மற்றும்19 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

நாக்பூர் கமலா நேரு கல்லூரியுடன் இணைந்து நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் ,இந்தியா முழுவதிலுமிருந்து ,ஏராளமான அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

நாற்பதிற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் மாநாட்டில் முன்வைக்கப்பட்டன. அவை குறித்து விவாதிக்கப்பட்டன.

கருத்தரங்கத்தின் துவக்க நிகழ்ச்சி கமலா நேரு கல்லூரியில் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிக்கு முற்போக்கு செயல்பாட்டாளர் பாலச்சந்திரன் காங்கோ தலைமை தாங்கினார்.

தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் அத்துல் வைத்தியா கருத்தரங்கத்தை துவக்கிவைத்தார்.

கல்லூரியின் முதல்வர் டாக்டர் ஸ்மித்தா வன்ஜாரி,டாக்டர் டிலோ பாட்வைச் சிறப்புரையாற்றினர்.

அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின் அகில இந்திய பொதுச் செயலாளர் அனில் ராஜிம்வாலே, செயலாளர் பேராசிரியர் யுகல் ராயலு , தலைவர் விஜயகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் . இந்நிகழ்வில் ஏராளமான மாணாக்கர்கள் கலந்து கொண்டனர்.

நாக்பூர் சட்டமன்ற விடுதி அரங்கில் , மூன்று நாட்கள் நடைபெற்ற, இக் கருத்தரங்கில் 40க்கும் மேற்பட்டோர் ஆய்வுக் கட்டுரைகளை முன் மொழிந்து உரையாற்றினர்.

தமிழ்நாட்டிலிருந்து டாக்டர் ஜி. ஆர். இரவீந்திரநாத் "காலநிலை நெருக்கடியும் தீவிரமடையும் தொற்று நோய்களும்" என்ற தலைப்பிலும், டாக்டர் ஏ.ஆர். சாந்தி "சுற்றுச் சூழல் பாதிப்பு பெண்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம்" என்ற தலைப்பிலும், தங்களது கட்டுரைகளை முன்மொழிந்து உரையாற்றினர்.

கருதரங்க நிறைவு நிகழ்வில் , இந்திய அமைதி மையத்தின் முன்னாள் இயக்குநர் டாக்டர் தெஜிந்தர்சிங் ராவல் சிறப்புரையாற்றினார்.

சோலாப்பூர் புன்யஸ்லோக் அகில்யா தேவி ஹொல்கர் பல்கலைக் கழக துணைவேந்தர் மிருனாளினி பட்னாவிஸ் கருத்தரங்க நிறைவு உரையாற்றினார்.

18.02.2023 மாலை, அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் தேசிய நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் ,அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின் அடுத்த அகில இந்திய மாநாட்டை, வரும் செப்டம்பர் 29, 30 மற்றும் அக்டோபர் 1, 2 ஆகிய தேதிகளில் கேரளாவில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

# மணப்பாறை நகர்மன்றத்தில் சிபிஐ உறுப்பினர்கள் தர்ணா!



மணப்பாறை நகர்மன்றத்தில் சாதாரண கூட்டம் அண்ணா கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் கீதா மைக்கேல் ராஜ் தலைமை தலைமையில், நகர்மன்றத் துணைத் தலைவர் முத்துலட்சுமி, நகராட்சி ஆணையர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நகர்மன்றத் துணைத் தலைவர் நகராட்சி பகுதியில் உள்ள கட்டுமான பணிக்கு அனுமதி வழங்குவதில் முறைகேடு நடைபெற்று உள்ளது என்று கூறி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். அவருடன் ஐந்து கவுன்சிலர்கள் தர்ணாவில் பங்கேற்றனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நகர் மன்ற உறுப்பினர்கள் தங்கமணி, மனோன்மணி ஆகியோர் நகராட்சி நிர்வாகத்திற்கு ஒரு கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்தும் இரு சக்கர வாகன ஏலத்தை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரினர். அதே கோரிக்கையை திமுக நகர்மன்ற உறுப்பினர்களும் கோரினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நகர் மன்ற உறுப்பினர்கள் நகர்மன்ற கூட்டத்தில் இருசக்கர வாகன ஏல ஒப்பந்தத்தை ரத்து செய்ய கூறி முழக்கமிட்டனர்.

# வத்திராயிருப்பு புறவழிச் சாலையை அமல்படுத்தக்கோரி கையெழுத்து இயக்கம்

வத்திராயிருப்பு பேரூராட்சியில் மக்கள் தொகை அதிகரிப்பால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. இதனால் புறவழிச்சாலை திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அமைச்சர் மற்றும் மாவட்ட நிர்வாகத்திடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. அதனடிப்படையில் இத்திட்டம் அமுல்படுத்தப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.

இந்நிலையில் வத்திராயிருப்பு புறவழிச்சாலை திட்டத்தை நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு அரசு அமுல்படுத்தக்கோரி முத்தாலம்மன் திடலில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. பேரூராட்சி தலைவர் தவமணிபெரியசாமி தலைமை வகித்தார். நகர செயலாளர் காளீஸ்வரன் முன்னிலை வகித்தார். தேசியகுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ துவக்கி வைத்து பேசினார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், நிர்வாககுழு உறுப்பினர் வி.இரவி, வட்ட செயலாளர் கோவிந்தன், தவிச சவுந்திரபாண்டியன், தவிதொச மணிக்குமார் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



### போக்குவரத்து கழகத்தில்

# ஓட்டுனர், நடத்துனர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்

### தமிழ்நாடு அரசை வலியுறுத்தி ஏஐடியூசி ஆர்ப்பாட்டம்




தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நிரப்பப்படாமல் உள்ள ஓட்டுனர், நடத்துனர் உள்ளிட்ட காலிபணியிடங்களை நிரப்ப வலியுறுத்தி கும்பகோணம் அரசு போக்குவரத்து ஏஐடியூசி தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தஞ்சாவூர் ஜெபமாலைபுரம் நகர் கிளை முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மத்திய சங்க பொதுச் செயலாளர் தாமரைச்செல்வன் தலைமை வகித்தார்.ஓய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தை ஏஐடியூசி மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம் துவக்கி வைத்து பேசினார். கோரிக்கைகளை விளக்கி போக்குவரத்து சங்க மாநில துணைத்தலைவர். துரை. மதிவாணன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா உள்ளிட்ட போக்குவரத்து சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# குரூப் 2 தேர்வை ரத்து செய்து, மறு தேர்வு நடத்த வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய குரூப் 2 தேர்வு குறித்து பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன. ஆட்சிநிர்வாகக் கட்டமைப்பில் இரண்டாம் நிலை அலுவலர்கள் முக்கியத்துவம் வாய்ந்த கடமைப் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியவர்கள். இதற்கான தேர்வு மிகுந்த கவனத்துடன் நடத்தப்பட்டிருக்க வேண்டும். கேள்வித்தாள் வழங்கப்பட்டதில் தொடங்கி, பல ஏற்பாடுகளில் தேர்வாணையம் தவறுகளுக்கு இடமளித்து விட்டதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக தேர்வாணையத்தின் விளக்கமும் ஏற்கத் தக்க முறையில் இல்லை. இந்த நிலையில், குழப்பமும், குளறுபடிகளும் நிறைந்த குரூப் 2 தேர்வை ரத்து செய்துவிட்டு மறுதேர்வு நடத்துவதான் தேர்வாணையத்தின் நம்பகத் தன்மையை உறுதி செய்யும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு உறுதிபட வலியுறுத்தி, இதற்கான முறையில் சந்தேகத்தின் நிழல் படிந்து விட்ட தேர்வை ரத்து செய்து, மறு தேர்வு நடத்த வேண்டும் என பணியாளர் தேர்வாணையத்தையும், தமிழ்நாடு அரசையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஆரல்வாய் மொழியில் ஆர்ப்பாட்டம்

குமரி மாவட்டத்தில் ஆரல்வாய்மொழி கிளையின் சார்பில் மக்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி முன்னாள் நகரச் செயலாளர் எல்.சுப்பிரமணியம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆரல்வாய்மொழி இரயில் நிலையத்தில் அனைத்து இரயில்களும் நின்று செல்ல வலியுறுத்தியும், அழகிய நகர் பொய்கை நகர் ஓடையை தூர்வாரக்கோரியும், தேசிய நெடுஞ்சாலையில் உள்ள டாஸ்மாக் கடையை அகற்ற வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார்.அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநில துணைத் தலைவர் பேராசிரியர் சுந்தரம், தோவாளை தாலுகா செயலாளர் வி.கல்யாணசுந்தரம், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட துணை செயலாளர் நாராயணசாமி, நாகர்கோவில் மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

ஆரல்வாய்மொழி நகரச் செயலாளர் வி. அருள்குமார் போராட்டத்தை ஒருங்கிணைத்தார். பூதப்பாண்டி பஞ்சாயத்து துணைத் தலைவர் எஸ்.அனில்குமார் முடித்து வைத்தார்.

## அறிவிப்பு:

ஜனசக்தி சமூக ஊடகங்களில் முகநூல், டுவிட்டர், இன்ஸ்டாகிராம், டெலகிராம், யூடியூப் ஆகியவற்றில் அமைப்புச் செய்திகள், போராட்டங்கள், தலைவர்களின் உரைகள் இடம்பெற காணொலிகள், படங்களுடன் செய்திகளை சுருக்கமாக பின்வரும் மின்னஞ்சல் அல்லது வாட்ஸ்அப் எண்ணுக்கு அனுப்பி வையுங்கள்.

மின்னஞ்சல் :
janasakthidigital@gmail.com
வாட்ஸ் அப் : 8122521624

ஆசிரியர் குழு

## இந்த வார தம்பிக்குறள்

### 108. வேளைக்கு வேறுபடி

**வகைக்கு வகைவாரி உண்ப சுவைக்காங்கு**

**வேளைக்கு வேறு படி.**

ஒவ்வொரு வேளையும் வெவ்வேறு சுவையுள்ள உணவை உண்ணவே மக்கள் விரும்புவர். அதுபோலவே ஒவ்வொரு பொழுதும் ஒரே நூலைப்படிக்காமல் வெவ்வேறு வகையும், வெவ்வேறு சுவையும் உள்ள நூல்களைப் படிக்க வேண்டும். (அப்பொழுதுதான் சலிப்பு வராது.)


**அல்லாதார் நூற்களிலும் ஆய்ந்தாய்ந்து**

**கொள்ளுதல் நல்லறிவே யாகஉம் நாடு.**

நல்லவர் அல்லாதவர் நமக்குப் பிடிக்காதவர் நூல்களையும் படிக்க வேண்டும். அவற்றிலும், நல்லவற்றைத் தேடி ஆராய்ந்து எடுத்துக் கொள்ளுதல் நல்லறிவாகும். (மாற்றான் தோட்டது மல்லிகையும் மணம் தரும்).

# நூல் நயம்

## கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை இன்றைய முதலாளியம்



உலகைப் புரிந்து கொள்வதற்கும் அதை மாற்றி அமைப்பதற்குமான வழிகள் என்ன. அந்த வழிகளை சுட்டிக்காட்டும், அவற்றில் பயணம் மேற்கொள்பவர்களுக்கு வழிகாட்டும் தத்துவமும், அரசியல் மார்க்கமும் என்ன என்பான பற்றி 19ம் நூற்றாண்டை சேர்ந்த அர்ப்பணிப்புமிக்க சோசலிசவாதிகள், கம்யூனிஸ்ட்டுகள் ஆகியோரிடையே நடந்த ஆழமான, உணர்ச்சிகரமான வாதங்கள். கருத்துப் போராட்டங்கள் ஆகியவற்றின் விளைபொருளே கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை.

பகிரங்கமான விவாதங்களில் இருந்தும் 1847–48 ஆம் ஆண்டுகளில் பாட்டாளி வர்க்கத்தை எதிர்நோக்கி கொண்டிருந்த பிரச்சனைகளுக்கான தீர்வை நோக்கிய தேடலில் இருந்தும் உருவானதே கம்யூனிஸ்ட் அறிக்கை. ஆனால் அறிக்கையில் விவரிக்கப்பட்ட வடிவத்தில் அப்படியே இன்று முதலாளித்தும் உலக அளவிலோ, தனி ஒரு தேச அளவிலோ இல்லை.

தடையற்ற வணிகம், போட்டி முதலாளியம் என்பன ஏகபோக முதலாளியமாக, பின்னர் 19ஆம் நூற்றாண்டில் இருந்து ஏகாதிபத்திய முதலாளியமாக வளர்ச்சி பெற்றது. இன்று அது புதிய பரிமாணங்களை பெற்றுள்ளது. 20 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் இருந்து முதலாளித்துவத்தில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றங்களை நாம் கவனிக்க வேண்டும். பூர்ஷா வர்க்கத்தின் உற்பத்தி பொருள்களுக்கு மென்மேலும் விரிவடைந்து வரும் சந்தை தேவைப்படுகிறது. அந்த தேவை அவ்வர்க்கத்தை புவிபரப்பு முழுவதிலும் ஓடும்படி விரட்டுகிறது. அது எல்லா இடங்களிலும் கால் பதிக்க இடம் தேட வேண்டியதாகிறது. எல்லா இடங்களிலும் குடியேற வேண்டியதாகிறது. எல்லா இடங்களிலும் தொடர்புகளை நிறுவ வேண்டியதாகிறது.


ஒரு நாட்டின் வளர்ச்சிக்கான மிக முக்கிய உந்துவிசை வணிகம் தான். தடையற்ற சந்தை என்பதின் அடிப்படை கோட்பாடு வணிகத்தின் மூலம் பெறும் லாபம் ஈட்டப்படுமேயானால் அதனால் ஏற்படும் நன்மைகளும், பயன்களும் அடிதட்டு மக்களுக்கும் கூட சொட்டு சொட்டாக போய் சேரும். தொழில் வணிக முதலாளிகள் பெரும் லாபம் ஈட்டுவார்கள் . அவர்கள் மீண்டும் அதிக முதலீடுகள் செய்வார். இதன் மூலம் பணம் மேலும் மேலும் ஒரு இடத்தில் குவியும். ஏழைகள் மீண்டும் ஓட்ட சுரண்டப்படுவார்கள் என்பதை மார்க்ஸ் தொழிலாளர் வர்க்கத்திற்கு எச்சரிக்கையாக முன் அறிவித்து இருக்கிறார்.

இதனால்தான் மார்க்ஸ்சை, கண்டு இன்றைக்கும் முதலாளித்துவ வர்க்கம் அஞ்சுகிறது . இந்நூலை வாசிக்க வேண்டிய தருணம் இது.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | எஸ்.வி.ராஜதுரை |
| பக்கம் | : | 136 விலை: 200 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 |

## யூதர்கள் சைவர்களான கதை



இந்த சிறு தொகுப்பில் இடம்பெறும் கட்டுரைகள் எல்லாம். சமயங்கள், சமயப் பிரிதிகள், சமய சாதுரிகள் சம்பந்தப்பட்டது. இவைகள் பக்தி வளர்க்காது ஆனால், கலாச்சாரத்தில் சமயங்கள் வகிக்கும் பங்கு பற்றி இன்னும் அறிய உங்களை தூண்டும் என்று நம்புகிறேன் என்னும் நூலாசிரியரின் முன்னுரையுடன் துவங்கும் இந்த நூல்.

இலங்கை ஆறுமுக நாவலர் அவர்கள். கிறிஸ்தவ திருமறை மொழிபெயர்ப்பில் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு, கிறிஸ்தவ மத பரப்பாளர்களால் சைவ மதம் தூர்மாக்கம் என்றும். சைவர்கள் அஞ்ஞானிகள் என்றும் பரிகசித்தபோது, அதே திருமறையை பயன்படுத்தி கிரியைகளை பொருத்தமட்டில். இந்த இரு சபைகளிடையே வித்தியாசமே இல்லை என்று, வேத, வசன சான்றுகளுடனும், நிலைநாட்டினார் என இந்நூல் பதிவு செய்கிறது.

காலனி நாட்களில் ஆங்கில ஆட்சியாளர்களின் ஆசிர்வாதத்துடன் கீழை நாடுகளுக்கு வந்த கிறிஸ்தவ குருமார்களின் முக்கிய பணி நற்செய்தி பரப்புவது தான். அப்பொழுது சைவ கோவில் வழிபாட்டை விணான கடவுள் வணக்கம் என்று கூறினார். நாவலர் இதற்கு இலக்கிய வழி ஒப்பிட்டு முறையை கையாண்டு பதிலடி கொடுத்தார்.

யூத ஆலய வழிபாட்டுக்கும் நல்லூர் கந்தசாமி கோவில் வழிபாட்டுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டார்?. எங்களுக்கு லிங்கம். உங்களுக்கு தேவனை தொழுது கொள்ளும் உடன்படிக்கை பேழை. லிங்கத்திற்கு முன் நாங்கள் சாஷ்டாங்கம் செய்வது போல், யோசுவா, தாவீது போன்றோர் அந்த பேழை முன் பிரதிஷ்டை பண்ணவில்லையா? என்றார். நாங்கள் விக்ரஹத்திற்கு தீபம் காட்டுகிறோம். அவ்வாறே வெள்ளைப்போளம் ,கலப்பில்லாச் சாம்பிராணி கடவுளுக்கு பரிசுத்த தூபமாகக்குவாயாக என்று யூதர்களுக்கு மோசஸ் சொல்லவில்லையா? என்று கேள்வி எழுப்பினார். சிவன் கோயில்களில் நடக்கும் நடனங்களை கிறிஸ்தவர்கள் கேலி செய்த போது, தாவீது அரசன் கடவுள்களின் சன்னிதியில் நடனமாடியதை உதாரணம் காட்டினார்.

சமய சீர்திருத்தக்காரர்கள் பரிசுத்தவான்கள் அல்ல, அவர்களுக்கு ‘களிமண் கால்கள்’ உண்டு . அவர்களின் எண்ணப்பாட்டில் கறைகள் உண்டு. மார்ட்டின் லூதருக்கு யூத வெறுப்பு, நாவலருக்கு சாதி பார்ப்பு என நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். அன்றைய சமய பரப்பிநர்களுக்குள் நடந்த தத்துவ மோதல்களை அறிந்து கொள்ள இந்நூல் அனைவருக்கும் பயன்படும். அனைவரும் வாங்கி படிக்கவும்.

–சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | சச்சிதானந்தன் சுகிர்தாராஜா |
| பக்கம் | : | 70 விலை: 70 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 |

சுழலும் உலகம்

# ரஷ்யா உக்ரைன் போர்: சீன மக்கள் குடியரசின் 12 அம்ச செயல் திட்டம்!

ஓராண்டைக் கடந்து நீடித்து வருகிறது ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான போர்! இந்த நிலையில், ரஷ்யா உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவர இரு நாடுகளும் விரைவான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றும், அனைத்து நாடுகளும் இதற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் சீனம் வலியுறுத்தியுள்ளது.

உக்ரைனுக்குள் ரஷ்ய ராணுவம் நுழைந்து தாக்குதல் நடத்தத் தொடங்கி ஓராண்டு நிறைவடைந்திருப்பதை முன்னிட்டு, இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக கடந்த 24.02.2023 அன்று சீனம் 12 அம்ச செயல் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது. அதன் 12 அம்சங்கள் பின்வருமாறு:

**அனைத்து நாடுகளின் இறையாண்மையையும் மதித்து உயர்த்திப்பிடிப்பது:** சர்வதேச சட்டங்கள் மற்றும் ஐ.நா சபை சாசனத்தின் நோக்கங்களை உறுதியாகக் கடைபிடிக்க வேண்டும். அனைத்து நாடுகளின் சுதந்திரம், பிரதேச முழுமை (Territorial Integrity) மற்றும் இறையாண்மையை உறுதிபட உயர்த்திப்பிடிக்க வேண்டும். ஏழை நாடு, பணக்கார நாடு, சிறிய நாடு, பெரிய நாடு என்றில்லாமல் அனைத்து நாடுகளும் சர்வதேச சமூகத்தின் சமநிலை கொண்ட உறுப்பு நாடுகளாகக் கருதப்பட வேண்டும். எவ்வித பாகுபாடின்றி, சர்வதேச சட்டங்கள் சமதள நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

**பனிப்போர் மனப்பான்மையை விட்டொழிப்பது:** ஒரு தேசத்தின் பாதுகாப்பு இதர நாடுகளை ஒழித்துக்கட்டுவதால் ஏற்படுவதில்லை; இராணுவ இருப்பை விரிவுபடுத்துவதாலோ அல்லது மேலும் பலப்படுத்துவதாலோ எந்தவொரு பிராந்தியத்தின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த இயலாது. எனவே, அனைத்து தரப்பினரும் ஐரோப்பிய மற்றும் ஆசிய கண்டங்களின் நிலைத்தன்மை மற்றும் சமாதானத்திற்காக ஒன்றிணைந்து போராட வேண்டும்.

**போர்களைப் புறந்தள்ளுவது:** போர்களோ, மோதல்களோ எவருக்கும் நன்மை அளிக்கப் போவதில்லை. அனைத்து தரப்பினரும், பதற்றமான சூழலை உருவாக்குவதைத் தவிர்க்க வேண்டும்; நெருக்கடியான நிலைமை மேலும் மோசமாகாமல் பாதுகாத்திட வேண்டும். படிப்படியாகப் பதற்ற சூழலைத் தணித்து, முடிவாக, விரிவானதொரு போர் நிறுத்தத்தை அடைவதற்கு உகந்தபடி, ரஷ்யாவும், உக்ரைனும் மிக விரைவில் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். இந்த முயற்சிக்கு அனைத்து நாடுகளும் ஆதரவளிக்க வேண்டும்.

**அமைதிக்கான பேச்சுவார்த்தையைத் தொடருவது:** பேச்சுவார்த்தை மூலமாகவே உக்ரைன் பிரச்சனைக்கு ஒரு மேம்பட்ட தீர்வு காண இயலும். பிரச்சனையில் தொடர்புடைய நாடுகள், அப்பிரச்னைகளுக்கு விரைவில் அரசியல் தீர்வு கண்டிட, சமாதானப் பேச்சுவார்த்தைகளை சரியான திசைவழியில் முன்னெடுத்துச் சென்றிட, சர்வதேச சமூகம் பற்றுறுதியுடன் பணியாற்றிட வேண்டும்; அதற்கான சூழல் மற்றும் அரங்கங்களை உருவாக்குவதில் ஈடுபட வேண்டும். இது தொடர்பாக, ஓர் ஆக்கப்பூர்வமான பாத்திரத்தை சீனம் தொடர்ந்து வகிக்கும்.

**மனிதநேயமற்ற சூழலைப் போக்குவது:** போர் சூழல் மற்றும் போர் காரணமாக, அப்பாவி மக்கள் பாதிப்பிற்கு உள்ளாகாமல் பாதுகாக்கப்பட வேண்டும். போர் நடக்கும் பகுதிகளில் சிக்கித் தவிக்கும் அப்பாவி மக்களை, அங்கிருந்து வேறு பகுதிக்குப் பாதுகாப்பாக அழைத்துச் செல்ல வேண்டும். போர் நடைபெறும் பகுதிகளில் மனிதநேய அடிப்படையிலான உதவிகளை மேற்கொள்ளுவதில் ஐ.நா சபையின் ஒருங்கிணைப்பு பணிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

**போர் கைதிகளையும், பொதுமக்களையும் பாதுகாப்பது:** போரில் ஈடுபடும் நாடுகள், பெண்கள், குழந்தைகள், போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் போர் கைதிகள் ஆகியோரின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில், சர்வதேச சட்டங்களை உறுதிபட பின்பற்ற வேண்டும். பொதுமக்கள் மீதோ, அவர்கள் இருக்கும் பகுதிகளிலோ தாக்குதல் தொடுக்கக் கூடாது. ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையே இரு நாட்டுப் போர் கைதிகள் பரஸ்பரம் ஒப்படைக்கப்படுவதை சீனம் ஆதரிக்கிறது. அதற்கான உகந்த சூழலை உருவாக்கிட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சீனம் அறைகூவல் விடுக்கிறது.

**அணுமின் உலைகளைப் பாதுகாப்பது:** அணுமின் உலைகள் மற்றும் இதர அணுமின்னாற்றல் தளங்கள் மீது ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் தொடுப்பதை சீனம் எதிர்ப்பதுடன், அணுமின்னாற்றல் குறித்த சர்வதேச சட்டங்களை அனைத்து தரப்பினரும் மதித்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

**மூலோபாய ஆபத்துகளைக் (Strategic Risks) குறைப்பது:** அணு ஆயுதப் போர்களும், அணு ஆயுத பயன்பாடும் நிகழக் கூடாது. அணு ஆயுத பரவல் தடுக்கப்பட வேண்டும்; அணு ஆயுத நெருக்கடி தவிர்க்கப்பட வேண்டும். எந்தச் சூழலிலும், எந்தவொரு தேசமும் இரசாயன மற்றும் உயிரி ஆயுதங்களைப் (Biological Weapons) பயன்படுத்தக் கூடாது; அவை தொடர்பான



பயன்பாடு மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் நாடுகள் ஈடுபடுவதைச் சீனம் எதிர்க்கிறது.

**உணவு தானிய ஏற்றுமதியை ஊக்கப்படுத்துவது:** ரஷ்யா, துருக்கி, உக்ரைன் மற்றும் ஐ.நா சபை கையெழுத்திட்ட கருங்கடல் உணவு தானிய முன்னெடுப்பை (Black Sea Grain Initiative) அனைத்து தரப்பினரும் செம்மையான முறையில் முழு அளவில் நடைமுறைப்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஐ.நா சபை வகிக்கும் முக்கிய பாத்திரத்தை அனைத்து தரப்பினரும் ஏற்று, ஆதரவு அளிக்க வேண்டும். சர்வதேச உணவு பாதுகாப்பு தொடர்பான சீனாவின் முன்மொழிவு சர்வதேச உணவு நெருக்கடிக்கு, சாத்தியப்பாடு நிறைந்த ஒரு தீர்வை வழங்குகிறது.

**ஒருதலைப்பட்சமான தடைகள் விதிக்கப்படுவதை நிறுத்துவது:** ஒருதலைப்பட்சமான பொருளாதார தடைகள் மற்றும் அதிகபட்ச வல்லாதிக்க நடவடிக்கைகளால் பிரச்னைகளைத் தீர்க்க இயலாது; அவை புதிய பிரச்சனைகளை மட்டுமே உருவாக்கும். ஐ.நா பாதுகாப்பு மன்றத்தால் அங்கீகரிக்கப்படாத ஒருதலைப்பட்சமான தடைகளை சீனம் எதிர்க்கிறது. உக்ரைன் நெருக்கடியின் பதற்றத்தைக் குறைக்கும் வகையிலும், வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடையும் வகையிலும், அந்நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை சிறப்படையும் வகையிலும், சம்பந்தப்பட்ட நாடுகள் இதர நாடுகள் மீது ஒருதலைப்பட்சமான தடைகள் விதிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**தொழில் மற்றும் வழங்கல் சங்கிலிகளை (Industrial and Supply Chains) ஸ்திரப்படுத்துவது:** தற்போதுள்ள உலக பொருளாதார அமைப்பை அனைத்து தரப்பினரும் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். அரசியல் உள்நோக்கங்களுக்காக உலகப் பொருளாதாரத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவதை அனைவரும் எதிர்க்க வேண்டும். நெருக்கடியின் மோசமான விளைவுகளைக் குறைத்திடவும், போக்குவரத்து, உணவு வர்த்தகம், நிதி மற்றும் மின்னாற்றல் உள்ளிட்ட துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பைச் சீர்கெடாமல் பாதுகாத்திடவும், உலகப் பொருளாதார மீட்டெடுப்பைப் பலப்படுத்தவும் கூட்டு முயற்சிகள் அவசியம் ஆகும்.

**போருக்குப் பிந்தைய மீட்டுருவாக்கத்தை மேம்படுத்துவது:** போரினால் சிதைவுற்ற மண்டலங்களில் போருக்குப் பிந்தைய மீட்டுருவாக்கத்தை மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. அத்தகைய முயற்சிகளில் ஒரு ஆக்கப்பூர்வமான பாத்திரத்தை வகித்திடவும், தேவையான உதவிகளை வழங்கிடவும் சீனம் ஆயத்தமாக இருக்கிறது.

**கருங்கடல் உணவு தானிய முன்னெடுப்பு** (Black Sea Grain Initiative): 2022 ஆம் ஆண்டு உக்ரைன் மீது ரஷ்யா இராணுவ தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த போது, ரஷ்யா, உக்ரைன், துருக்கி மற்றும் ஐ.நா சபைக்கு இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த ஒப்பந்தத்தின் பெயர் தான் கருங்கடல் உணவு தானிய முன்னெடுப்பு (Black Sea Grain Initiative) ஆகும். இந்த ஒப்பந்தப்படி, உக்ரைன் நாட்டு துறைமுகங்களில் இருந்து உணவு பொருட்களையும், தானியங்களையும் கடல்வழியாகப் பாதுகாப்பாக மற்ற நாடுகளுக்கு கொண்டு செல்வதற்கான ஒரு முன்னெடுப்பு ஆகும்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் காரணமாக உணவு தானிய ஏற்றுமதி மிகக் கடுமையாகப் பாதிப்புக்கு உள்ளானது. இதன் விளைவாக, உணவு பொருட்களின் விலை அதிகரித்தது. குறைந்த வருவாய் பிரிவில் உள்ள நாடுகளில் பஞ்சம் ஏற்படலாம் என்ற சூழல் உருவானது. இந்தப் பிரச்னையை எதிர்கொள்ள, ஐ.நா சபையின் ஆதரவுடன், துருக்கி ஆலோசனை கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தது. அந்த ஆலோசனை கூட்டத்தின் முடிவாக, 120 நாட்களுக்கு மட்டும் செல்லுபடியாகக்கூடிய ஒப்பந்தம் ஒன்று இஸ்தான்புல் நகரில் 22.07.2022 அன்று கையெழுத்தானது. 19.11.2022 அன்று இந்த ஒப்பந்தம் காலாவதியாகவிருந்த நிலையில், 17.11.2022 அன்று உக்ரைன் மற்றும் ஐ.நா சபை இணைந்து, இந்த ஒப்பந்தம் மேலும் 120 நாட்களுக்கு நீட்டிக்கப்படுவதாக அறிவித்தன.

தொகுப்பு: அருண் அசோகன்

# ஆளுநரைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்



















## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்

# பல்லாண்டு வாழ்ந்திட வேண்டும்

**இரா.நல்லகண்ணு வாழ்த்து**

தமிழ்நாடு அரசின் முதலமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின், 69வது வயதை நிறைவு செய்து, 70வது பிறந்த நாள் (மார்ச் 1) காணும் இனிய நாளில், அவர் மேலும் பல்லாண்டு வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நாட்டின் அரசியல் அதிகாரம் மதவெறி சக்திகளின் ஆதிக்கத்தில் ஆட்பட்டு கிடக்கிறது. சமூக வளர்ச்சிப் போக்கில் நிதிமூலதன சக்திகளின் லாப வேட்டைக் களமாக அன்னை பூமி மாற்றப்பட்டுள்ளது.

சமூக செல்வம் ஒரு சிலரிடம் குவிந்து வருவதும், மிகப் பெரும்பகுதி மக்கள் வாழ்விழந்து நிற்பதுமான துயரநிலை வரலாறு காணாத எல்லைக்கு சென்றுள்ளது.

மனிதகுலத்தை ஒன்றுபடுத்தும் சகோதரத்துவமும், சமத்துவமும். சமூகநீதியும் மறுக்கப்பட்டு, சனாதனக் கருத்துக்கள் திணிக்கப்படும் அபாயகரமான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அமைத்து, நாட்டின் நம்பிக்கை நாயகனாக திகழ்ந்து வரும் சூழலில், பழமைவாத கருத்துக்களை எதிர்கொண்டு, முறியடிக்கும் முனைப்பான செயல்பாடு மகிழ்ச்சி அளிக்கிறது. அடுத்து வரும் நாடாளுமன்ற தேர்தலில் மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி கட்சிகள் வலிமை பெற்று, அதிகாரத்தில் மாற்றம் காண வேண்டும் என விழைகிறேன்.

சிந்தனை சிற்பி சிங்காரவேலரும், பகுத்தறிவுப் போராளி பெரியார் ஈ.வெ.ரா.வும், பேரறிவாளர் காரல்மார்க்ஸ், பிரடெரிக் ஏங்கல்ஸ், வி.இ.லெனின் போன்றோரின் களப்பணி அனுபவத்தை உள்வாங்கி, தமிழ் சமுகத்தின் தனித்துவ தன்மையோடு முன்னெடுத்த சமதர்ம சுயமரியாதை கருத்தாயுதம் கொண்டு, அறிஞர் அண்ணா, பேராசான் ஜீவானந்தம், முத்தமிழறிஞர் கலைஞர் போன்றோர் கட்டமைத்த மதச்சார்பற்ற, சாதி பேதமற்ற, சமூக நீதி ஜனநாயக வழிநின்று, கொள்கை வீரராக செயலாற்றி வரும் தம்பி மு.க.ஸ்டாலினின் அரசியல் பணியும், ஆட்சிப் பணியும் நீண்ட பல பத்தாண்டுகள் தொடர்ந்து, நிலைத்து அமைந்திட வேண்டும். அது புவிக்கோள வரலாற்றில் புதிய சகாப்தமாக அமையப் பெற வேண்டும் என வாழ்த்தி மகிழ்கிறேன். வாழ்வாங்கு வாழ்ந்திட வாழ்த்துக்கள்.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு வெளியிட்டுள் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

## திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்டப் பொருளாளரும், ஏஐடியூசி கோவை மாவட்ட பொதுச் செயலாளருமான சி.தங்கவேலு – லட்சுமி தம்பதியரின் அன்புமகன் டி.நிதீஷ்குமார் – எம்.கிருஷ்ணவேணி ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்வு பிப். 23 அன்று கோவை வீரமாத்தி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மணமக்கள் ஜனசக்தியின் வளர்ச்சிநிதியாக ரூ.5 ஆயிரத்தை கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ. அவர்களிடம் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி துணைச் செயலாளர் ஜே.ஜேம்ஸ் ஆகியோர் உள்ளனர்.

கோவை மாவட்ட இந்திய தேசிய மாதர் சம்மேளன செயலாளர் கே.சுமதி – கட்சி உறுப்பினர் கந்தசாமி ஆகியோரது மகள் கே.ரேஷ்மா அவர்களுக்கும், சேலம் காரிப்பட்டி சக்திவேல் – கலைச்செல்வி ஆகியோரது மகன் கே.எஸ்.பவித்திரன் அவர்களுக்கும் கோவை ஈஸ்வரி டி.ஜி.பி. மஹாலில் பிப்.22 அன்று திருமணம் நடைபெற்றது. பிப்.21 அன்று மாலை நடைபெற்ற வரவேற்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் எம்.ஆறுமுகம், கோவை மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட துணைச் செயலாளர் ஜே.ஜேம்ஸ், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, மாவட்டக்குழு உறுப்பினர்கள் பி.சுப்பிரமணியம், வே.வசந்தகுமார், என்.கணேசமூர்த்தி, கே.ஆர். தங்கராஜ், மாதர் சம்மேளன மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.சுதா உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

மணமக்கள் சார்பாக ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.5000 அளிக்கப்பட்டது.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 04.03.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57



த.லெனின்

# தமிழர்களை சொக்கவைத்த சொல்லேறு உழவர் தோழர் தா.பா.!

தமிழகத்தின் இடதுசாரி, பொதுவுடைமை இயக்க வரலாற்றில் தனக்கென தனி முத்திரை பதித்தவர் தோழர் தா.பாண்டியன்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் அவர் மாணவராக இருந்தபோது பொதுவுடைமை அரசியலின்பால் ஈர்க்கப்பட்டு அரசியலுக்கு வந்தவர். இலக்கியப் பேராசான் ஜீவா, இவரது திறமையை அறிந்து காரைக்குடி செல்கிற போதெல்லாம் அவரோடு சிறிதுநேரம் உரையாடி, உறவாடி இயக்கத்திற்காக இழுத்து வரப்பட்டவர்!

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் பெருமைமிகு முதல் பொதுச் செயலாளராக பொறுப்பேற்று தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் பொதுமை முழக்கம் புரிந்தவர்.

மார்க்ஸால்தான் இந்தியச் சமூகம் பிளவுண்டது என்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. ஆனால், 1975ஆம் ஆண்டு மதுரையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் விடிய விடிய நடைபெற்ற மாபெரும் பட்டிமன்றத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் அத்தூங்கா நகரில் விழித்திருந்து பரவசத்தோடு பங்கேற்ற செய்தியை இன்றும் பல மூத்த தலைவர்கள் சொல்வது வியப்புக்குரியது!

சமூக வளர்ச்சிக்கு வழிகாட்டுவது மார்க்சியமா? வள்ளுவமா? காந்தியமா? என்பதுதான் தலைப்பு.

மார்க்சியம் என்பதற்கு தோழர் தா.பா., சக்தி கோதண்டம், வள்ளுவமா என்பதற்கு தமிழ்குடிமகனார், திருமதி காந்திமதி, காந்தியமா என்பதற்கு தஞ்சை ராமமூர்த்தி, பேராசிரியர் தி.இராசகோபாலன் ஆகியோர் பங்கேற்று பேசுகின்றனர்.

நடுவரோ மாபெரும் இலக்கியக் கடல் குன்றக்குடி அடிகளார். நமது சொல்லேறு உழவர் தா.பா. கேட்போரை கிரங்கடிக்கும் விதமாக மார்க்சிய விஞ்ஞானத்தின் அருமை பெருமைகளை சமூக மாற்றத்திற்கான அதன் கூறுகளை அழகுபட அழுத்தமாக எடுத்துரைக்கிறார்.

மற்றவர்கள் எடுத்துவைத்த வாதங்கள் எதுவும் எடுபடவில்லை. தா.பா.வோ ஈட்டி முனைபோல பாரதி, பாரதிதாசனின் கவிதை வரிகளும், கம்பனின் கவித்துவ காட்சி அமைப்புகளும் மானுடம் தழைத்திட நல்லறம் காட்டிய நானில அறிஞர்களின் கருத்துகளையெல்லாம் தனது உரையின் வாயிலாக எடுத்துவைத்து மாற்றோரையும் கிரங்க வைத்தார்.

பொழுது புலரும்நேரம் பட்டிமன்றம் முடிவிற்கு வந்தது. சமூக வெற்றிக்கு உடனடியாக உதவுவது மார்க்சியமே என்று நடுவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தனது தீர்ப்பை அறுதியிட்டு அளித்தது தோழர் தா.பா.வின் வலுவான வாதத் திறமைக்கும் பேச்சாற்றலுக்கும் கிடைத்த மாபெரும் பரிசு!



கல்லூரிபேராசிரியராக, வழக்கறிஞராக, அரசியலாளராக, இலக்கியவாதியாக, பேச்சாளராக, அழகு ஆங்கிலத்தில் உரையாற்றுபவராக, எழுத்தாளராக, நூலாளராக, பத்திரிகை ஆசிரியராக, தொழிற்சங்க செயல்பாட்டாளராக, பண்பாட்டு ஆய்வாளராக என பன்முகத் தன்மையுடன் அனைத்திலும் தனது முத்திரையைப் பதித்தார்.

சிந்தாந்தத் தெளிவிலும், விவாதக் களத்திலும் வெகுமக்களை ஈர்த்ததோடு மாற்றோரையும் தன் வாதத்தால் இழுத்த பெருமை அவரைச் சாரும்.

பாரதியும் யுகப்புரட்சியும் என்ற ஆய்வு நுலை எழுதி பாரதியின் பொதுவுடைமை கருத்துக்களை பாரெங்கிலும் எடுத்து வைத்தவர் தா.பா. அந்நூலுக்காக சோவித் நாட்டின் விருதினையும் பெற்றவர்.

தந்தை பெரியார் குறித்து ஈரோட்டில் அவர் ஆற்றிய உரை மிகச் சிறப்பானது. அதனை நூல் வடிவமாக்க திராவிடர் கழகம் இன்றுவரை பல லட்சம் பிரதிகளை விற்றுள்ளதே அதன் சிறப்பைக் கூறும்.

அவரது எழுத்து தனித்துவம் கொண்டது. அவரது பேச்சுக்கும் எழுத்துக்கும் எந்த இடைவெளியையும் பார்க்க முடியாது. அரசியல் கட்டுரைகள் என்றால் அனல் பறக்கும். தேசபக்தி சிறகடிக்கும். இளைஞர், மாணவர், இளைய தலைமுறைக்கான கட்டுரைகள் என்றால் பல வரலாற்று எடுத்துக் காட்டுகளை இலக்கிய உவமைகளை பொருத்தமான முறையில் எடுத்து வைத்து படிப்போரை இயங்க வைக்கும், எழ வைக்கும்.

பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து அதிலும் குறிப்பாக உலகமய, கார்ப்பரேட் சுரண்டல் குறித்து மிகச்சிறந்த கட்டுரைகளை தரவுகளோடு தமிழர்களுக்கு தந்தவர்.

கிராமப்புற உழைப்பாளி மக்களின் பிரச்சினைகள் பற்றி எழுதினால் ஒட்டுமொத்த நாட்டின் கூட்டு மனசாட்சியையே அசைத்துப் பார்க்கும் ஆதாரங்கள் அடுக்கடுக்காக அணிவகுக்கும். இயக்கத்திலும் சரி, தனிப்பட்ட முறையிலும் சரி இளைய தலைமுறையை வென்றெடுக்கும் வியூகத்தை எப்போதும் கொண்டிருப்பார்.

80 வயதைக் கடந்தும் மாணவர் தோழர்களுக்காக தொடர்ந்து ஜனசக்தியில் கட்டுரைகள் எழுதினார். ஈழத் தமிழர் பிரச்சினை ஒரு புதிய வடிவத்தை எடுத்தபோது, அதை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்றவர் தோழர் தா.பா.!

சேனல் 4 முள்ளிவாய்க்கால் அவலத்தை ஒளிபரப்பியபோது, தனது இல்லத்தில் உள்ளம் உடைந்து கண்ணீர் சிந்தியதை அவரது மகள் குறிப்பிடுகிறார். எனவேதான் ஒரு காந்தி ஜெயந்தியன்று ஈழத்தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க உண்ணாநிலை அறப்போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தினார்.

சொந்த வாழ்விலும், பொதுவாழ்விலும் தனக்கென வாழா பெருவாழ்வு வாழ்ந்தவர். மனதில் பட்டதை நேர்பட பேசுபவர். நெறிபட வாழ்ந்தவர். இந்த சமூகம் சரிபட உழைத்தவர்!

ஒருபோதும் தனது பாதை சரிபடாது என சிந்தித்தாரில்லை. எப்போதும் உறுதிபட மானுடம் தான் வெல்லும் மார்க்சியம் அதை சொல்லும் என்பதையே முழங்கியவர்.

எனவே, தோழர் தா.பா. விற்கு இறப்பு இல்லை. உலகமய, ஏகாதிபத்திய, நவகாலனி ஆதிக்க சக்திகளை எதிர்க்கும் போராட்டங்களில் என்றும் உயிர்ப்போடு அவர் உடன் இருக்கிறார். அவர் வழியே மக்களைத் திரட்டுவோம்! மாற்றங்களை ஏற்படுத்துவோம்!

**தொடர்புக்கு: 94444 81703**

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்

# பல்லாண்டு வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்து



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் 69 வயதை கடந்து, மார்ச் 1 அன்று 70வது பிறந்த நாள் காணும் இனிய நாளில், அவர் மேலும் பல்லாண்டு நல்ல ஆரோக்கியத்துடன், வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வாழ்த்துகிறது.

பதினான்காவது வயதில் "இளைஞர் அணி" அமைத்து, கோபாலபுரத்தில் தொடங்கிய அரசியல் பணி 56 ஆண்டுகளை கடந்து தொடர்கிறது.

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் மிட்டா மிராசுகளும், செல்வச் சீமான்களும், பெரும் நிலக்கிழார்களும், புரோகிதப் புல்லுருவி சக்திகளின் துணையோடு ஆதிக்கம் செலுத்தி வந்த காலத்தில், உருவான தென்னிந்திய நல உரிமை இயக்கத்தின் முன்னோடிகளும், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், பகுத்தறிவு இயக்கத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. முன்னெடுத்த சமதர்ம சுயமரியாதை இயக்கத்தின் தொடர்ச்சியாக, அறிஞர் அண்ணா கட்டமைத்த ஜனநாயக புரட்சிக்கு சாமானிய மக்களை அணி திரட்டிய நாவலர், பேராசிரியர் வரிசையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் தனிச் சிறப்புப் பெற்றவர்.

மு.கருணாநிதி – தயாளு அம்மையார் தம்பதியருக்கு மூன்றாவது மகவாக பிறந்த மு.க.ஸ்டாலின், தந்தையின் சிந்தனை தாக்கத்தில் அவர் நடந்த அரசியல் பாதையை தேர்வு செய்து பயணம் தொடர்ந்தவர்.

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் திராவிட இயக்கமும், கம்யூனிஸ்டுகளும் இணைந்து பயணிக்கும் "தோழமை உறவு" கொள்கை நிலையில் இயல்பானது. மாறுபட்ட காலத்திலும் அறுந்து விடாமல் தொடரும் பண்பு கொண்டது.

நிலக் குவியல் முறையை உடைத்து, நிலவுடைமைக்கு உச்சவரம்பு சட்டம் நிறைவேற்ற வேண்டும் என கம்யூனிஸ்டுகள் போராட்டக் களம் இறங்கிய காலத்தில் ஆதரித்து குரல் கொடுத்தது முன்னேற்றக் கழகம்.

குறைந்தபட்ச ஊதியம், பணிப்பாதுகாப்பு, ஓய்வுகாலப் பலன்களுக்காக, தொழிற்சங்கம் அமைத்துப் போராடிய தொழிலாளர்கள் அரசின் அடக்குமுறைகளை எதிர்கொண்ட காலத்தில் "கூலி கேட்டான் அத்தான் குண்டடி பட்டு செத்தான்" எனக் கூக்குரல் எழுப்பி தமிழ்நாட்டு மக்களை கிளர்ந்தெழச் செய்தது.

போராட்டப் பாரம்பரியம் கொண்ட தி.மு.கழகத்தின் தலைவர் பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலின், சமூகநீதி ஜனநாயகத்தை பாதுகாக்கவும், தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டவும் உறுதியுடன் செயலாற்றும் கொள்கை வீராக முன்னேறி வருகிறார்.

மதவெறி, சாதிய சக்திகளை தனிமைப்படுத்தி, சுயநல கும்பலை முறியடிக்க மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி அமைத்து, அதனை வழி நடத்தும் தலைமை ஏற்றதும், தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையை பெற்று, ஆட்சியில் அமர்ந்ததும் பெருமை அளிப்பதாகும்.

அரசியல் அமைப்பு சட்டம் தெளிவாகக் கூறும், மாநிலங்கள் இணைந்த "ஒன்றியம்" என்பதை பட்டி, தொட்டி முதல் டெல்லி செங்கோட்டை வரை போர்க்குரலாக எதிரொலிக்க செய்ததை யாரும் மறுத்திட இயலாது.

ஆட்சி நடத்துவதிலும், பிரச்சினைகளை எதிர்கொள்வதிலும், அவரது ஜனநாயக அணுகுமுறை கொள்கைக்கு வலுசேர்த்து வருகிறது.

சனாதான சக்திகள், பழமைவாத கருத்துக்களை விதைத்து வெறுப்பு அரசியல் உருவாக்கும் சூழலில், வழக்கொழிந்து வரும் மொழிகளை திணித்து, உயர்தனிச் செம்மொழியாம் தமிழுக்கு கேடு செய்வோர், மாநில நிதி வளத்தை வரியின் பெயரால் வாரிச் சுருட்டிக் கொள்ளும் சர்வாதிகார முறையை ஆதரிப்போர், ஆளுநர் மாளிகை வழியாக அத்துமீறல் புரிவோர் என கூட்டாட்சி கோட்பாடுகளை தகர்த்து வரும், வகுப்புவாத, ஜனநாயக விரோத சக்திகளை ஒன்றிய அதிகாரத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்பது மு.க.ஸ்டாலினுக்கு வரலாறு வழங்கும் கடமையாகும். இந்த வரலாற்று கடமையில் நூறு சதவீதம் வெற்றி பெற்று, பல்லாண்டு காலம் வாழ்வாங்கு வாழ வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு 70வது பிறந்த நாளில் வாழ்த்தி மகிழ்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.